# படி

**2012**

# PAHDI

படித்தேன்! படித்தேன்!! படித்தேன் சுரந்தது.

படித்தல் 1 படிதல் 13




## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உலக ஆசிரியர் தின வெளியீடு

**World Teachers Day Jaffna National College of Education**

[illegible]

[illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]
7. [illegible]
8. [illegible]
9. [illegible]
10. [illegible]
11. [illegible]
12. [illegible]
13. [illegible]
14. [illegible]
15. [illegible]
16. [illegible]
17. [illegible]



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி உயர் திரு. S.K யோகநாதன் அவர்களின் ஆசிச் செய்தி

ஆசிரியர் தொழில் உவந்து போற்றப்படும் உயர்ந்த தொழில் மனித மாண்பின் மகத்துவம் அதற்கு ஏற்றாபோல் எமது கல்லூரியில் மிகவும் சிறந்த முறையில் அனுஸ்டிக்கப்படுகின்றது. அதற்கு மகுடம் வைத்தாற்போல் “படி” சஞ்சிகை வெளிவருகின்றது. இச் சஞ்சிகையின் வரவுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது தரமான ஆசிரியர் தரமான கல்வி தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்பட்டு வருகின்றன. தரமேம்பாடானது கல்விச் சேவை பெறுநராகிய மாணவர்களைக் குறிக்கோளாக் கொண்டது. பாடசாலைகளின் பிரதான சேவை பெறுநர் மாணவர்களாகும் ஆகவே பாடசாலைச் செயற்பாடுகள் மாணவர்களை மையப்படுத்தியதாக அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக அமைய வேண்டும்.

பாடசாலையின் ஆசிரியரும் ஏனைய ஆளணியினரும் உள்ளக சேவை பெறுநராவர். பெற்றோர் வேலைச்சந்தை அரசு,

சமூகம் ஆகியோர் வெளிச்சேவை பெறுநராவர். குறைவுத் தன்மை, தரம் ஆகியவை தீர்மானிக்கப்படுவது போது இச் சேவை பெறுநர்களாகிய தேவைகளைப் பூர்த்தி செய்யப்படுவதன் மீதே தங்கியுள்ளது. இவ்வகையில் தரமான கல்வியினூடாகவே தரமான சமூகத்தைப் படைக்க முடியும் என்ற நோக்குடன் ஆசிரியர்களை தரமாக்கும் பல்வேறு செயலாற்றுகைகளும் வலுவூட்டல்களும் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்நீரோட்டத்தில் நாமனைவரும் இணையவேண்டும். அதற்கான வழியை எடுத்தியம்பும் முக்கிய செயற்பாடாக படி இதழ் வெளிவருகின்றமையாகும். இச் சஞ்சிகையின் ஆசிரியர் கல்வியியலாளர் த.சிவகுமார் அவர்கள் மிகச் சிறந்த முறையில் வெளிக் கொணர்ந்துள்ளார். அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மேலதிக பீடாதிபதி உயர் திரு S. அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்த்துரை

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். தங்களது கடமையை விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் வினைத் திறனுடனும் மேற்கொள்ளும் நல்லாசிரியர்களை இறைவனுக்கு இணையானவர்கள் எனப் போற்றப்படுவதையே மேற்கூறப்பட்ட சான்றோர் வாக்கு புலப்படுத்தி நிற்கின்றது. நல்லாசிரியர்கள் பெற்றோர்களுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான உயர்ந்த பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்காக எமது கல்லூரியில் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் முகிழ்நிலை ஆசிரியர்களின் பணி மகத்துவமானது உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வெளிவரும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

ஒரு ஆசிரியர் ஆக்கத்திறன் வாய்ந்தவராக இருக்கும் போது தான் கற்பித்தல் பூரணத்துவம் அடைகின்றது. முகிழ்நிலை ஆசிரியர்களின் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வளர்ப்பதற்கு களமாய் அமைகின்றது. இச்சஞ்சிகையில்

உள்ளத்து உணர்வுகளை நேரான முறையில் வெளிப்படுத்தி நாம் பெற்ற கல்வியின் பயனை ஏனையோரும் அனுபவிக்கக் கூடிய வகையில் தந்த ஆசிரிய கல்வியியலாளர்கள், அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வருடாவருடம் வெளி வருகின்ற இச்சஞ்சிகைக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து ஆசிரிய சமூகத்திற்கு பயன்படும் வகையில் செயற்பட்டு வருகின்ற மதிப்பிற்குரிய பீடாதிபதி திரு S.K யோகநாதன் அவர்களையும் பாராட்டுவதோடு இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு பின்னணியில் இருந்த இதழாசிரியர் ஆசிரிய கல்வியியலாளர்களையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.



## இதலாசிரியரின் இதயத்திலிருந்து

ஆசிரியர்கள் இறைவனால் உருவாக்கப்படுகின்றார்கள் ஆசிரிய பணியானது புனிதம் வாய்ந்த அர்ப்பணிப்பான சேவைத்தொழிலாகும் ஆசிரியர்கள் அனைவரும் அதனை உனர்ந்தும் தனது படைப்பின் நோக்கம் அறிந்தும் சேவை செய்யவேண்டும்.

நல்லாசிரியர் என்போர் மாணவர்களிடையே அவர்கள் மட்டத்தில் கலந்து கொண்டேஅவர்களை விட மேலான விதத்தில் தீர்மானங்களை எடுக்கக்கூடியவராக இருக்க வேண்டும் தாம் கற்பிக்கும்பாடத்தையும் விட மேலதிகமாகப் பல்வேறு விடயங்களை அறிந்தவராக இருக்கவேண்டும் பசி, தாகம் பற்றிக் கருதாமல் செயற்படுபவராக இருக்கவேண்டும் எல்லா மாணவர்களிடமும் சமமாகவும் அறிவுபூர்வமாகவும் பழகக் கூடியவராக இருப்பதோடு சரியான தொடர்பாடலை மேற்கொள்பவராக இருக்க வேண்டும் நேர்மாப்பாங்குடன் பிள்ளைகளை அனுகும் ஆசிரியரே இறைவனுக்கு ஒப்பானவராவார்.

ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் படி இதழானது இவ்வாண்டு மிகவும் சிறப்பாக ஆசிரியர்களுக்கு வேண்டிய நேர்மனப்பாங்கான கட்டுரைகளைத்தாங்கி வெளிவருகின்றது மனதுக்கு மகிழ்வைத்தருகிறது.

படி இதழ் ஒவ்வொரு வருடமும் உலக ஆசிரியர் தினத்தன்று பிரசவமாவதற்கு வழிகாட்டியாக எமக்கு உட்சாகமளிக்கக்கூடிய எமது பீடாதிபதி உயர் திரு எஸ்.கே யோகநாதன் அவர்கள் எமக்குக்கிடைத்தது நாம் செய்த பாக்கியம் அவருக்கு எனது நன்றிகள்.

அத்தோடு கடமையே கண்என எமக்கு வழிகாட்டியாக இருந்து எமக்கு ஊக்கமளிக்கும் எமது மேலதிக பீடாதிபதி, எஸ்,அமிர்தலிங்கம் அவர்களுக்கும் எனது நன்றிகள். படி இதழுக்கு ஆக்கங்களை வழங்கிய அனைத்து கல்வியலாலருக்கும் எனது நன்றிகள். அத்தோடு படி சஞ்சிகை மேலும் சிறப்புற வெளிவருவதற்கு உதவிய கக்ஸ்ரோன் பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகள்

த. சிவகுமார்
விரிவுரையாளர்
விசேட கல்வித்துறை
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

# ஆசிரியரும் சிறுவர் நலனோக்கும்

S.K.யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலகலாவிய ரீதியில் உயர்வான உன்னதமான வாய்மையாக ஆசிரியர் தொழில் உயந்துள்ளது. மனித வளத்தை மேம்பாடு செய்யும் முதன்மையாளர்களாக ஆசிரியர்களே உள்ளார்கள். பாடசாலையில் பயிலும் அனைவரும் சிறுவர்களாகவே உள்ளார்கள். எனவே இவர்களை முறையாக வழிப்படுத்தி அவர்களது அரவணைப்பில் அக்கறை செலுத்தி, அவர்களது உரிமைகளைப் பார்க்கின்ற பொறுப்பு ஆசிரியருக்குப் பெருமளவு உண்டு. சிறுவர்களுடைய அரவணைப்பு, உரிமைகள் தொடர்பாக ஆசிரியர் நிறைவான விடயங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும்.

சிறுவர்கள் வயதினடிப்படையில் 14வயதிற் குட்பட்டவர்களை தொழிர்திணைக்களம் சிறுவர்கள் என்கிறது. சட்டவல்லுரார்கள் 16 வயதுக்குட்பட்டவர்களைச் சிறுவர்கள் என்கிறது. ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாய பிரகடனத்தில் 18வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்கள் எனப்பிரகடனப்படுத்தியுள்ளது. இவ்வகையில் சிறுவர்களின் பொதுவான குணங்களாக பின்வருவன உள்ளன.

**<u>சிறுவர்களின் குணங்கள்</u>**

* துடிதுடிப்பானவர்கள், கள்ளம் கபடமற்றவர்கள்

* விளையாட்டில் ஆர்வம் காட்டுவார், வெள்ளைமனம் கொண்டவர்
* பயனம் தெரியாதவர்கள், அன்பை எதிர்பாப்பவர்கள்
* பாகுபாடுபற்றிச் சிந்திக்கத் தெரியாதவர்கள்
* வன்முறையை விரும்பாதவர்கள், கோளிக்கை விநோதங்களை விரும்பாதவர்கள்.

இவ்வாறான பண்புகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கற்று சமநிலை ஆளுமை பெற வேண்டிய சிறுவர்கள் இன்று பல்வேறு வகைகளிற் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுகின்றார். குறிப்பாக யுத்த சூழலின் பின்னர் எமது பிரதேசத்தில் சிறுவர்கள் பெரும் பாதிப்புக்களை அடைந்துள்ளார்கள்.

<u>யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்:</u>

இலங்கையில் யுத்தத்தின் பின் கேள்விக் குறியாகவுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலமே. யுத்த நெருக்கடிகள், வன்முறைகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளாலும் அதன் சுழற்சிகளினாலும் மிகவும் கஸ்டமான வாழ்வை அனுபவித்து வரும் சிறுவர்கள், பெற்றோரை, உறவுகளை, கல்வியை இழந்த நிலையில் வறுமை, பசி, பட்டினி, ஆதரவற்ற நிலை போன்றவற்றால் அடித்துச் செல்லப்படும்போது அவர்கள் நிலை பரிதாபமிக்கதாகவே அமைகிறது. இது போன்ற நிலைகளால் சிக்கித் தவிப்பவர்கள் அதிகார வர்க்கத்தின் அடக்கு

முறைகளாலும், முதாளித்துவ தலைமைகளின் பிடிகளினாலும் பிரித்தாடப்படுகின்றனர்.

யுத்த அனர்த்தங்கள், பிரச்சினைகள் பொதுவாக எல்லோரையும் பாதித்தாலும் குழந்தைகள், சிறுவர்களைத்தான் அதிகளவு அவை பாதிக்கின்றன. சகல விதமான எதிர்பார்ப்புக்களுடன் பாதிக்கப்பட சிறுவர்கள் சுயாதீனமாக சமூகத்தில் வாழ முடியாத நிலையிலும் யுத்தத்தின் பயங்கரமான நெருக்கடிகள், வறுமை, தனிமை போன்ற சூழ்நிலைகள் இச் சிறுவர்கள் ஒரு விதமான மனவிரக்தி அழுத்தம், மனச்சோர்வு போன்றவற்றுக்கு உள்ளாகின்றன.

யுத்தப்பாதிப்புக்கள், வறுமைகள், குடும்ப வன்முறைகள் வீடில்லாமை, அகதிவாழ்வு, உடலில் ஏற்பட்ட காயங்கள், அன்புக்குரியவர்களின் இழப்புக்கள், உறவினர்களின் மரணங்கள் மற்றும் பயங்கர மோசமான சம்பவங்களை நேரடியாகக் கண்டு அதனால் மனம் தாக்கப்படல் போன்ற சிறுவர்களுக்கு மன அழுத்தம், மனச்சுமை மற்றும் உடல் உளப் பாதிப்புக்ள் ஏற்படக் காரணங்கள் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கை உட்பட ஆப்கானிஸ்தான், ஈராக், பலஸ்தீனம், போன்ற பல நாடுகளில் யுத்தத்தால் பாரிய நெருக்கடிகளுக்கு சிறுவர்கள் முகம் கொடுக்கின்றனர். இலங்கைச் சிறுவர்களில் 1/3 பங்கினர் மன அருத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதேவேளை வறுமைக்

கோட்டுக்குக் கீழுள்ள பல நாடுகளில் அநாதரவான சிறுவர்கள் சிறுவர் தொழிலாளர்களாக மாற்றபட்டுள்ளனர்.

மேலும் இவர்களின் போசாக்கு நிலை மிகக் கவலையளிப்பதற்காகவே உள்ளதாகவும் போதியஅளவு சத்துணவு அளிப்பதில் விழிப்புணர்வற்ற நிலையே காணப்படுவதாகவும் அறிக்கைகள் பல சுட்டிக்காட்டுகின்றன. இது இவ்வாறிருக்க அநேகமான சிறுவர்கள் வருமை, பசி, இடம் பெயர்தல், வேலையின்மை, அகதி வாழ்வு போன்றவற்றில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் பாதிப்புள்ளாகி வருகின்றனர். இதனால் யுத்தின் பின் சிறுவர்கள் ஆதரவற்ற நிலைமை போன்றவற்றால் தன்னம்பிக்கை இழந்து அவர்களின் கல்வியும் எதிர்காலமும் கேள்விக் குறியாக மாறியுள்ளது.

யுத்த எதிரிகளான சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகம், குடும்ப வறுமை, அநாதரவான சூழ்நிலைகளால் கடும் விரக்தியடையும் மனநிலைக்கு ஆளாகின்றனர். அத்துடன் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக போதைப் பொருட்பாவனைக்கு அடிமையாகி உடல்நலம் பாதிக்கப்பட்டதுடன் உளவியல் தாக்கங்களும் அவர்கள் உட்படுத்தப்படுகின்றனர். இதன் காரணமாக சிறுவர்கள் வன்மம் மிக்க மனநிலை படைத்தவர்களாக மாற வழிவகுக்கின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சுமக்கமுடியாத சுமைகள், துர்ப்பாக்கிய நிலைமைகள் அல்லது உதவி பெற முடியாத சூழ்நிலைகள் நாளாந்த வாழ்வில் எதிர்மறைத் தன்மைகளை உருவாக்கி அவர்களின் எதிர்காலம்

இருள்மயமாகின்ற நிலைமை ஏற்படக் காரணமாகின்றது. இதனால் இவர்கள் வன்முறையாளர்களாகவும் இறுக்கமான மன, உளத்தன்மை கொண்டவர்களாகவும் மாறுகின்றனர்.

குறிப்பாக யுத்தப்பாதிப்பில் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் பழக்கவழக்கங்களானது, சாதாரண பெற்றோரின் குழந்தைகளை விட அதிகமான வன்முறை, மூர்க்கத்தனம் கொண்டவராக உள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அன்பு, அரவணைப்பு, ஆதரவான பாதுகாப்பு உணர்வு மற்றும் நல்ல வழிகாட்டல் என்பன யுத்தம் போன்ற நெருக்கடியான சம்பவங்களின் பின்பு உருவாகின்ற மனச்சுமை, மன அழுத்தம் மற்றும் உளவியல் பாதிப்புக்களைக் குறைப்பதாக சிறுவர் ஆய்வாளர்கள் கூறுகின்றார்.

இது தவிர மேலும் இலங்கையில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும்குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் தொடர்ச்சியாக சிறுவர்கள் வேலைக்கமர்த்தப் படுவதாகவும், அதன் மூலம் அவர்களுக்க வழங்கப்படுகின்ற கல்வி உட்பட பல்வேறுப்பட்ட உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரச்சபைக்கு கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளினால் சிறுவர்களுடைய எதிர் காலம் அழிக்கப்படுகின்றது. எனவே நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களை அன்போடு ஆதரித்து அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு மாத்திரமன்றி நாட்டிலுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும். இப்போது

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக நாம் நாட்டில் பல்வேறு புதிய சட்ட மூலங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆகவே இச்சட்ட மூலங்களை மக்களுக்கு தெளிவுப்படுத்தி அவர்களுடைய பங்களிப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

18 வயதிற்குட்பட்டவர்களை வேலைக்கமர்த்து பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது. ஆகவே இது தொடர்பாக நாங்கள் எல்லோரும் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிறுவர்களையும் தங்களுடைய பிள்ளைகளாக நினைத்து சிறுவர்கள் எங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டாலும் அது தொடர்பாக உடனடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அல்லது. 1929 என்ற எண்ணிற்கு தொலைபேசி முலம் இச்செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடிவதுடன் சிறுவர்களின் எதிர்கால பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு குறிப்பாக ஆசிரியர்கள் தமது பாடசாலையில் பயிலும் சிறுவர்களின் அரவனைப்புக்களில் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டியுள்ளது. வீட்டில், சமுகத்தில், ஏனைய இடங்களில் சிறுவர்கள் பாதிக்கப்படுவதை சிறுவர்கள் மூலமாகவே அறியக்கூடிய சந்தர்ப்பங்கள் ஆசிரியர்களுக்கு அதிகமுண்டு. அதனைப்பயன்படுத்தி சிறுவர் அரவனைப்பில் கூடுதல் அக்கறை கொண்டவர்களாக இன்றைய ஆசிரியர்கள் இருக்கவேண்டும்

# செயற்பாடு சார்ந்த கற்றல் கற்பித்தலின் போது தர உள்ளீடுகளின் பயன்பாடு

S.அமிர்தலிங்கம்
மேலதிக பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**கற்றல்**

குறித்த ஒரு பாடநெறியை சில நாட்கள், சில வாரங்கள், சிலமாதங்கள் அல்லது சில வருடங்கள் என்றவாறாக பயில்கின்றோம். ஆயினும் அவ்வாறான பாடநெறியை பின்பற்றும் போது கற்பிக்கப்படும் எல்லா விடயங்களையும் நாம் கற்றுக்கொண்டுள்ளோம் எனக்கருத முடியுமா? ஒரு பாடநெறியை பின்பற்றிய பின்பு நமது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்க்கூடியவையும், நீண்ட காலமாக பெற்ற அறிவின் பிரதிபலிப்பையுமே நாம் கற்றுக் கொண்டவை எனலாம். ஆகவே ஒருவரின் நடத்தையில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவாறான விளைவே கற்றல் எனலாம்.

**கற்பித்தல்**

ஒருவரிடத்தே நிலையான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிதொரு செயலை கற்பித்தல் எனலாம். இதன்படி குறிப்பிட்ட சில திறன்களையோ, ஆற்றல்களையோ, மனப்பாங்குகளையோ, நடத்தைகளையோ ஒருவரிடத்தே ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளும் முயற்சியே கற்பித்தல் ஆகும்.

## கற்றல் - கற்பித்தல் துணைச்சாதனங்கள்

கற்றலிலும் பயிற்சிகளிலும் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் தனியாளுக்கும் குழுக்களிற்கும் இடையில் தொடர்புகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் உபகரணங்கள் கற்றல் துணைச்சாதனங்கள் என எட்காடேல்(1964) கூறுகின்றார். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது சாதனங்களைப் பயன்படுத்தலின் முக்கியத்துவம் முன்னரிலும் பார்க்க இன்று எல்லோராலும் வேகமாக உணரப்படுகிறது. மொழியை ஊடகமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஒருவர் பூரணமாக கற்றுக் கொள்ள முடியாது என்பது பலராலும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் எனும் ஐம்பொறிகளினூடாக நாம் கற்றல் அனுபவங்களை பெறுகின்றோம். அது மட்டுமல்லாமல், மேற்படி புலன்களை தனித்தனியாக பயன்படுத்தி பெறும் கற்றல் அனுபவங்களிலும் பார்க்க ஒரு சில புலன்களின் ஒன்றிணைப்பால் கூடிய பயனுள்ளதும், பிழையற்றதும், நிலையானதுமான அனுபவங்களைப் பெறலாம் என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் தான் கற்றற் துணைச்சாதனங்களின் தேவை அதிகமாக உணரப்பட்டுள்ளது.

### கற்றல் - கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள்

- பயனுறுதிமிக்க கவர்ச்சிகரமான கற்றல் சூழல் உருவாகும்.

- தனியாளுக்கும் குழுவிற்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றத்தை இலகுவாக்கும்.
- கற்றல் வேகமடையும்.
- மாணவர்களை ஊக்குவித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம்.
- சிக்கலான எண்ணக்கருக்களை எளிதில் விளக்கலாம்.
- கற்றுக் கொள்பவைகளின் உண்மையான அனுபவங்களை பெற வழிவகுக்கின்றது.

நான் கேட்டேன், நான் மறந்தேன், நான் பார்த்தேன், ஞாபகப்படுத்தினேன், நான் செய்தேன், நான் விளங்கிக் கொண்டேன் என்பதற்கு அமைவாகி கற்றல் அனுபவங்களை காட்சிகள், செயற்பாடுகள் மூலமே வழங்க வேண்டும். அப்போதுதான் சிறந்த கற்றல் இடம் பெறும். நூறு பேச்சுக்களைவிட ஒரு காட்சி மேலானது (சீனப்பழமொழி)

- மாணவர்கள் புத்தூக்கத்துடன் பாடங்களை கற்பர்.
- செற்களின் (மொழியின்) மூலம் பெறும் விளக்கத்தை விட ஆழமான விளக்கம் ஏற்படும்.
- பொழித்திறன், செல்வளம், பேச்சுத்திறன் ஆகியவை விருத்தியடையும்.
- வகுப்பிலும், பாடத்திலும் ஒரே இசைவான தன்மை அகற்றப்படும்.
- ஆசிரியர், மாணவர் தொடர்புகள் விருத்தியடையும்.
- நேரத்தை சிக்கனமாக செலவிட வழியேற்படும்.

➢ மாணவர்களின் வரவுகளை அதிகமாகச் செய்யலாம்.

➢ இது போன்ற இன்னும் பல பயன்கள் ஏற்படும்.

கற்றல் - கற்பித்தல் சாதனங்கள் எவை?

கற்றல் - கற்பித்தல் சாதனங்களை குறிப்பிட்ட சில உபகரணங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், எவரொருவருக்கும் யாதாயினும் ஒரு பொருள் கற்பதற்கு உதவுமாயின் அது கற்றற் சாதனமாகும். ஆகவே இயற்கைப் பொருட்கள் பலவும், மனிதனால் ஆக்கப்பட்ட செயற்கைக்கருவிகள் பலவும் ஒருவனுக்கு கற்பதற்கு உதவினால் அது கற்றற் கருவியாகும். இதன்படி புவியிலுள்ள சகல பொருட்களையும் கற்றற் துணைச்சாதனங்களாகக் கொள்ளமுடியுமெனினும் வகுப்பறைக்கற்பித்தல் கற்றலில் பயன்படுத்தக்கூடிய சில சாதனங்களை நமது வசதி கருதி பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கட்புல சாதனங்கள் (Visual Materials)

➢ கரும்பலகை

➢ பச்சைப்பலகை

➢ காந்தப்பலகை

➢ பிளனெல்பலகை

➢ நிழற்பிரதிப்பலகை

➢ செய்திப்பலகை

➢ வெள்ளப்பலகை



படி -13

➢ பக்கப் புரட்டி

2. வரைதல் சார் பொருட்கள் (Graphic Materials)

➢ ஒளிப்படங்கள்
➢ சித்திரங்கள்
➢ விளக்கப்படங்களும் அட்டவணைகளும்
➢ சுவரொட்டிகள்
➢ வரைபுகள் (கோட்டு, நிரல், வட்ட)
➢ படங்கள்

3. எறிவைப் பொருடகள் (Project Materials)

➢ ஊடுகாட்டிப் படங்கள் / மேற்தலை எறிவை (Tramparencies/Over Head Project)
➢ வழுக்கிகள் / வழுக்கு எறிவை (Slides/Slide Projector)
➢ படச்சுருள்,/படச்சுருள் எறிவை (Films/Films Projector)
➢ பல் ஊடாக எறிவை (Multimedia Projector)
➢ நுணுக்கெறிவை (Micro Projector)

4. செவிப்புல சாதனங்கள் (Audio Materials)

➢ ஒலிப்பதிவு தட்டு
➢ ஒலிப்பதியி (Audio cassette)
➢ ஒலிப்பதிவு நாடாக்கள்
➢ வானொலி

5. கட்புல செவிப்புல சாதனங்கள்

➢ பேசும் படம்

➢ வீடியோ நாடா (Vedio Cassettees)

➢ கணனி

➢ தொலைக்காட்சி

➢ இறுவட்டுக்கள் (CD)

➢ பல்லூடாக எறியி

6. மாதிரி உருக்கள்

➢ சிறிதாக்கப்பட்ட மாதிரி உரு

➢ குறுக்கு வெட்டு மாதிரி உரு

➢ பெரிதாக்கப்பட்ட மாதிரி உரு

➢ செயற்படு மாதிரி உருக்கள்

7. தன்வகைகள் **(Specimens)**

நேரடியாகக் காட்சிப்படுத்தும் உண்மைப் பொருட்கள்

8. செய்து காட்டல் (Demonstrations) or காட்சிப்படுத்தல்

9. நிஜவாழ்க்கை அனுபவங்கள் (Real life Experience)

➢ நாடகபாணி அனுபவங்கள்

➢ நாடகங்கள்

➢ வெளிச்சுற்றுலா / கல்விச் சுற்றுலா

➢ இயல்பான நாடகங்கள்

➢ பொம்மலாட்டம்

கற்றல் - கற்பித்தல் சாதனங்களைத் தேர்ந்தெடுக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டியவை

1) பாடத்தின் அல்லது பாட அலகின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள உதவுமா?

2) மாணவரின் வளர்ச்சி நிலைக்கு அல்லது வகுப்பு மட்டத்திற்கு பொருத்தமானதா?

3) கற்றற் சாதனங்களைத் தயாரித்துக் கொள்வதற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் போன்றவற்றை எளிதில் பெற்றுக்கொள்ளமுடியுமா?

4) செலவின்றியோ அல்லது மிகக் குறைந்த செலவிலோ தயாரித்துக் கொள்ள முடியுமா?

5) தேர்ந்தெடுக்கும் கற்றற் சாதனம் எவ்வளவு தூரத்திற்கு வினைத்திறனுடையதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் அமையும்.?

6) வகுப்பறையிலுள்ள ஏனைய சாதனங்களுடன் ஒப்பிடும் போது இச்சாதனம் கூடிய வினைத்திறன் கொண்டதாக இருக்குமா?

7) பாடத்தைக் கற்பிக்கச் செலவிடும் நேரத்திற்குப் பொருத்மானதா?

8) பாடத்தை கற்பிப்பதற்கு இச்சாதனம் அவசியம்தானா?

9) மாணவரின் கவனத்தை ஈர்க்க முடியுமா?

10) இச்சாதனத்தை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கற்றலை மேலும் ஊக்குவிக்கும் தன்மை கொண்டதாக அமையுமா?

11) இரசாயணப் பதார்த்தங்கள், கண்ணாடியிலான பொருட்கள்

(Test tube) கூரிய கருவிகளைப் பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் மாணவர்கள் கையாழ்வதை அவதானிக்க வேண்டும்.

கற்பித்தல் - கற்றல் சாதனங்களை தயாரித்தல்

- பாடத்தின் அல்லது பாட அலகின் நோக்கத்தை தீர்மானித்த பின்னர் அப்பாடத்தையோ அல்லது பாட அலகினையோ கற்பிக்கத் தேவையான துணைச்சாதனங்கள் யாவை என தீர்மானிக்கலாம்.
- அநேக சந்தர்ப்பங்களில் பாட ஆசிரியர் தனியாகவே சாதனங்களை தயாரித்துக் கொள்ள முடியும். சிலவேளைகளில் மட்டும் ஏனையவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- துணைச்சாதனங்களைத் தயாரிக்கும் போது மாணவர்களையும் சம்மந்தப்படுத்திக் கொள்ள முடியுமாயின் அதுவும் மிகப் பொருத்தமானதாக அமையும்.
- பாடத்தை கற்பிப்பதற்கு முன்னர் நேரகாலத்துடனேயே சாதனத்தை தயாரித்துக் கொள்ள வேண்டும்.
- நாம் விளங்க வேண்டிய விடயத்தை அல்லது எண்ணக்கருவை எளிதில் தெளிவுபடுத்தும் விதத்தில் துணைச்சாதனம் அமைக்கப்படல் வேண்டும். தேவையான இயல்புகள் அச்சாதனத்தில் வெளிக்காட்டப்படல் வேண்டும்.
- வாய்மூல விளக்கத்தினால் தெளிவுபடுத்த முடியாத அல்லது அனுபவத்தை வழங்க முடியாத ஒன்றைத்

தெளிவுபடுத்தும் நோக்கத்துடனேயே சாதனமொன்றை பயன்படுத்தல் வேண்டும்.

➢ தயாரிக்கும் சாதனம் விலை கூடியதாக அமையுமாயின் பல முறை பாவிக்கக் கூடியவாறு அதனைப் பாதுகாத்து வைக்கக்கூடிய விதத்தில் அமைத்தல் வேண்டும்.

➢ வகுப்பின் முன்னால் வைத்து மாணவர்களுக்கு காட்சிப்படுத்தும் சாதனமாயின் அதனைப் பாதுகாத்து வைக்கக்கூடிய விதத்தில் அவமதல் வேண்டும்.

➢ வகுப்பின் முன்னால் வைத்து மாணவர்களுக்கு காட்சிப்படுத்தும் சாதனமாயின் அதனைப் பாதுகாத்து வைக்கக்கூடிய விதத்தில் அளவில் பெரியதாய் அமைத்தல் வேண்டும்.

➢ தேசப்படமாயின் முடிந்தவரை அதன் உருவம் பேணப்படும் விதத்தில் நியாயமான நிறங்களைப் பயன்படுத்தித் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

## துணைச்சாதனமொன்றைபயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்

1. பாடத்தைக் கற்பிக்கும் போது பொருத்தமான சந்தர்ப்பத்தில் மட்டும் சாதனம் முன்வைக்கப்படல் வேண்டும்.
2. பாடத்தில் நடுவில் அல்லது இறுதிக் கட்டத்தில் பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட சாதனமொன்றை பாட ஆரம்பத்திலேயே காட்சிப்படுத்துவது பொருத்தமான தன்று.
3. பொருத்தமான சந்தர்ப்பத்தில் துணைச்சாதனத்தை காட்சிப்படுத்துவதன் மூலமே மாணவனின் கவனத்தை

தூண்டுவதுடன், கற்றலில் ஆர்வத்தையும் ஏற்படுத்த முடியும்.

4. வகுப்பறையிலுள்ள சகல மாணவர்களும் காணக்கூடிய வகையில் அச்சாதனத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கற்றல் - கற்பித்தல் சதனங்களை ஒழுங்கு முறைப்படி படிப்படியாக விளக்குதல் வேண்டும்.

6. ஆசிரியர்கள் தமது குறிக்கோள்களை எய்வது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

7. மாணவர்கள் தவறான விளக்கத்தையோ தவறாகன அவதானங்களையோ பெறுகின்றார்களா? என்பது குறித்து கவனஞ் செலுத்த வேண்டும்.

8. ஒளிப்படங்கள், சிறிய படங்கள், உபகரணங்கள் போன்றவற்றை மாணவர் ஒவ்வொருவரும் கையிலெடுத்துப் பார்க்கக் கூடிய வகையில் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

9. இலகுவாகவும் குறைந்த செலவில் செய்யக் கூடிய சாதனங்கள் எனின் ஒன்றுக்கு மேற்பட்ட உபகரணங்களைச் செய்து அவற்றை குழு செயற்பாட்டில் ஈடுபடச் செய்யலாம்.

10. தேவையெனின் காணப்பட்டால் யாதேனும் உபகரணத்தை மீண்டும் மீண்டும் பார்க்கச் செய்யலாம்.

செயற்பாடு சார்ந்த கற்றல் கற்பித்தல் செயன்முறையிலே கற்பித்தல் வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக கற்பித்தல் சாதனங்களை மிகவும் அவசியமானதாக காணப்படுகின்றது. அந்தவகையில் நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்திக் கற்பிக்கும் அறிவும் ஆற்றலும்அனைத்து ஆசிரியர்களுக்கும் அவசியமாகும் இதனூடாகவே கற்பித்தலை

இலகுபடுத்திக் கொள்வதோடு வினைத்திறன் விளை திறனுடையதாக்கிக் கொள்ள முடியும்.

ஆசிரியர் தனது கற்றல் கற்பித்தல் செயன்முறையைப் பயனுடையதாகவும் மாணவர்கள் விரும்பும் ஆசிரியராக திகழ்வதற்கு கற்பித்தல் சாதனங்களை உருவாக்குதல் சாதனங்களை பயன்படுத்துதல் தொடர்பான ஆளுமையுடையவராக இருக்கும் போதே அவரது கற்பித்தல் குறிக்கோளை நிறைவேற்றக் கூடியதாக அமையும் இதனால் மாணவர்களது கற்றல் கற்பித்தல் வெற்றிபெறும்.

# Education and Social Change

T.முகுந்தன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

*"Social process whereby the values, attitudes, or institutions of society, such as education, family, religion, and industry become modified. It includes both the natural process and action programs initiated by members of the community"*
*http://www.websters-online-dictionary.org/definitions*

*The major role of education as an agent of social change and social development is widely recognized today. Social change may take place when humans need change. When the existing social system of social institutions fails to meet the existing human needs and when new materials suggest better ways of meeting human needs.*

*Education is seen as a major vector in society, but that it is largely allocated a conservative role, since its main function is in the socialization of the young and the maintenance of the social order. During times of rapid social change, such as the second half of the 20th century, the role of education in the service of the nation is emphasized. When things are going well, especially economically, more experimentation with education is supported, and more idealistic goals are pursued, such as equity of educational opportunity. It is in the ideological and moral spheres, however, that education is most clearly expected to play a leading role. Social change takes place as a response to many types of changes that take place in the social and*
*non-social environment. Education can initiate social changes by*

*bringing about a change in outlook and attitude of man. It can bring about a change in the pattern of social relationships and thereby it may cause social changes.*

*Education can be used as a tool to empower the individual. Through child centred learning, students are able to see their own role in transformation. Societal change comes from the collective transformation of the individuals within that society. It has become secular today. It is an independent institution now. Education has been chiefly instrumental in preparing the way for the development of science and technology. Education has brought about phenomenal changes in every aspect of men's life. Francis J. Brown remarks that Education is a process which brings about changes in the behaviour of society. It is a process which enables every individual to effectively participate in the activities of society and to make positive contribution to the progress of society. Education today is oriented to promoting values of an urban, competitive consumer society. While comparing the existing education system, India has produced in the last five decades number of scientists, professionals and technocrats who have excelled in their fields and made a mark at the national and international levels. The top scientists, doctors, engineers, researchers, professors, etc. not those who were educated abroad but had got their entire education in India. It is not a question of the extent to which education provides or fails to provide employment to people but it is a question of education providing modern technology for the benefit of the poor and deprived people. It is a question of the quality of education. Instead of merely viewing the growing population as a liability, we should change the population into an asset and strength along with trying to control its growth. This can be done only by education and human development. The three main deficiencies in the present education system may be described as follows:*

*(1) The present education does not generate or fortify the type of knowledge that is relevant to our changed society.*

*(2) Technology associated with a particular body of knowledge is inappropriate to our stage of development in terms of its employment potential or investment demands.*

*(3) Education has failed to provide value framework which may prepare committed politicians, bureaucrats, technocrats, and professionals on whom our nation can depend for sophisticated system of support services to be useful in taking the country to the highest level. Though education does not guarantee high status and higher positions to all people, yet without education, an individual is unlikely to achieve social mobility. Gore avers that education plays a role in equalizing opportunities in three ways.*

*(1) By making it possible for all those who have the desire to be educated and the ability to benefit by that facility;*

*(2) By developing a content of education which will promote the development of a scientific and objective outlook.*

*(3) By creating a social environment of mutual tolerance based on religion, language, caste, class, etc. for providing equal opportunities of social mobility to all individuals in society, and for providing equal opportunity to secure good education is crucial.*

*How is education related to equality of opportunity can be perceived on the basis of the findings of one empirical study conducted in eight states in 1967 on the social background of students (age, sex, caste, father's occupation, father's education, etc.) studying at various levels high school, college and professional colleges. This study presented two posse-group, propositions:*

*(1) Education is priority with those in the white-collar group, and children in this group use educational facilities*

*more than other groups, and children in this group use educational facilities more than other groups;*

*(2) Education is differentially available to those who do not belong to white-collar group (see Gore, 1994:33). If the first proposition is correct, it probably underlines the irrelevance of education to non-white-collar groups in our society. Education has been accepted as one major agency of socialization, and teachers and educational institutions as socializing agents. In describing education as an instrument of social change, three things are important: the agents of change, the content of change, and the social background of those who are sought to be changed, i.e. students. Educational institutions under the control of different cultural groups reflect the values of those groups which support and control education. In this situation, teachers Impart specific values, aspirations and to the children. Social reformers, who were educated emphasized values like removal of caste restrictions, equality of women, doing away with social evil social customs and practices, voice in the governance of the country, establishing democratic institutions and so on. They, thus, wanted to teach liberal philosophy through education for changing society. In other words they regarded education as a flame or light of knowledge which dispelled the darkness of ignorance.*

*The use of education for spreading the values of modernization came to be emphasized from the 1960s and 1970s onwards. Highly productive economies, distributive justice,* people's participation in decision-making bodies, adoption of *scientific technology in industry, agriculture and other occupations and professions were accepted as goals for modernizing the Sri*

*Lankan. And these goals were to be achieved through liberal education. Thus, modernization was not accepted as a philosophy or a movement based on rational values system but as a process that was to be confined only to economic field but was to be achieved in social, political, cultural and religious fields too. Education was sought to be utilized as channel for the spread of modernity*

*According to the sociological perspective, education does not arise in response of the individual needs of the individual, but it arises out of the needs of the society of which the individual is a member1. The educational system of any society is related to its total social system. It is a sub system performing certain functions for the on-going social system. The goals and needs of the total social system get reflected in the functions it lays down for educational system and the form in which it structures it to fulfil those functions. In a static society, the main function of the educational system is to transmit the cultural heritage to the new generations. But in a changing society, these keep on changing from generation to generation and the educational system in such a society must not only transmit the cultural heritage, but also aid in preparing the young for adjustment to any changes in them that may have occurred or are likely to occur in future. In contemporary societies, "The proportion of change that is either planned or issues from the secondary consequences of deliberate innovations is much higher than in former times." This is more so in societies that has newly become independent and are in a developing stage. Consequently, in such modern complex societies, education is called upon to perform an additional function of becoming Thus, the relationship between educational system and society is mutual; sometimes the society influences changes in educational system and at other times the educational system influences changes in the society.*

*Education has become one of the influential instruments of social change in India. It has led to the mobilization of people's aspirations for development and change. Thus in modern complex national societies, education can neither be regarded as a controlling force conserving cultural heritage, nor could it be viewed as an agent of social change. It can only be regarded as a cooperative force in bringing about*

*social changes decided by the forces possessing more pervasive power in society.*

*Thus the education system needs a complete overhaul through proper legislation and its effective implementation. Legislations should be made taking into account the regional diversities of each state. The masses should be made aware of the new developments.*

***References***

*Greene.MC Reflections on Post Modernism and education. Educational Policy*

*http://www.sociology guidr.com / education / education and social change*

*Ram Ahuja (2005). Society in India concepts, Theories and Recent Trends New Delhi: p.215*

*Ram Ahuja (2005). Social Problems in India New Delhi. p.1-26*

# Karen Horney (கோரன் கோனே)

யானகி தர்மஜீலன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

கேரன் கோனே அவர்கள் நவபுரொய்டிசவாதிலில் ஒருவராவார் ஜேர்மனியில் 1885 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 16ம் திகதி பிறந்தார்.

கரேன் கோனே வைக்கல் டானில்சன்ற்கும் குளோரைல் என்பவர்களுக்கு மகளாக பிறந்தார்.

இவரது தகப்பனார் ஒரு கப்பல் தலைவனாக இருந்தார். அத்துடன் ஒரு சமயத்துடன் ஒன்றிணைந்த அதிகாரமுள்ளவராகவும் காணப்பட்டார். இவரது பிள்ளைகள் இவரை "வேதாகமத்தை எறிபவர்" என அழைத்தனர். கரேன் கோனேயின் தாயார் சற்று வித்தியாசமானவர். இவர் சோனி என மக்களால் அறியப்பட்டார்.

இவரது ஆரம்ப கால வாழ்க்கை மிகவும் மனவேதனை மிகுந்ததாக இருந்தது. தகப்பனார் பெருமளவு நேரத்தை கடல் பயணங்களில் கழித்தமையால் தந்தையின் அன்பு போதியதாக கிடைக்கவில்லை. பெருமளவு காலத்தை தாயுடனேயே கழித்தார்.

ஒன்பது வயதாக இருக்கும் போது, தன்னை சிறிது மாற்றினாள். பேராசைக்காரியாகவும் கலகக்காரியாகவும் மாற்றமடைந்தாள். கோனே கூறும்போது "If I couldn't be

pretty, I decided I would be smart" , இது வழமைக்கு மாறாக இருந்தது. உண்மையில் அழகானவளாக இருந்தாள். தனது சகோதரனை அடக்குவதற்கு முனைந்தாள். அவன் ஒரு கட்டிளமை பையனாக இருந்தமையால், இவளை வீழ்த்திவிட்டு சென்றான். இது கோனேயின் வாழ்வில் ஏற்பட்ட திருப்பமாக அமைந்தது. இப்பிரச்சினை ஒரு கொடிய நோயாக உருவெடுத்தது.

ஆரம்பகால வயது வந்த பருவம் நீண்டகாலம் பல்வேறு தொல்லைகள் நிறைந்ததாக காணப்பட்டது. இவரது தாயார் 1904 ம் ஆண்டு விவாகரத்து கேட்டு சகோதரர்களுடன் விடைபெற்றுச் சென்றுவிட்டார். 1906 ம் ஆண்டு மருத்துவக்கல்லூரியில் இணைந்து கொண்டார். இது பெற்றார்களின் விருப்பத்திற்கு மாறாக இருந்தது. அங்கு ஒஸ்கார் எனும் சட்டக்கல்வி மாணவனை சந்தித்தார். அவரை 1909 இல் திருமணம் செய்தார். மூன்று பெண்பிள்ளைகள் பிறந்தனர். 1911 இல் இவரது தாயார் மரணமடைந்தார். இது அவரில் உளவியல் பாதிப்பை ஏற்படுத்தியது.

உளவியலாளர் முன்மொழிந்தது மாதிரி, கோனே தகப்பனைப் போலல்லாத ஒருவரை திருமணம் செய்திருந்தார். கணவன் பிள்ளைகளிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார். இதில் கோனே தலையிடுவதில்லை. ஆனால் தனது பிள்ளைகளுக்கு சுகந்திரமான சூழ்நிலைகள் கிடைப்பதை விரும்பினார். பல வருடங்களிற்கு பின் பிள்ளை வளர்ப்பில் பல்வேறு

அம்சங்கள் உள்ளடங்கியிருப்பதாக உணர்ந்து கொண்டார்.

1923 ல் ஒஸ்காரின் வர்த்தகம் பாதிப்படைந்தது. அதே வேளை கோனேயின் சகோதரன் 40வது வயதில் நோய்வாய்ப் பட்டு இறந்தார். இது மென்மேலும் மனப்பாதிப்புக்கு உள்ளாக நேர்ந்தது. இது தற்கொலை முடிவுக்கு கோனேயை தூண்டியது.

1926 ல் கோனேயும் மூன்று பெண்பிள்ளைகளும் ஒஸ்காரின் வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டார்கள். 4 வருடங்களுக்கு பிறகு ஐக்கிய அமெரிக்காவில் புறூக்கிளின் எனும் இடத்தில் குடியேறினார்கள். 1930 இல் புறூக்கிளின் அறிஞர்களின் தலைநகரமாக இருந்தது. இக்கால கட்டத்தில் அறிஞர்களான Erich Fromm and Harry Stack Sullivan களுடன் தொடர்பு கிடைத்தது. இதனூாக கோனே தனது உளவியல் கோட்பாட்டை முன் வைத்தார். 1952 ம் ஆண்டு இறப்பு வரை தனது கோட்பாட்டை முன்வைத்து கற்பித்து எழுதினார்.

கோட்பாடு

அதிசிறந்த கோட்பாடாக **neurosis** காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இதனை வேறு கண்னோட்டத்தில் நோக்குகின்றார். இது சாதாரண வாழ்க்கையினை விட தொடர்ச்சியானதாக குறிப்பிடுகின்றார். தனியாள் கட்டுப்பாட்டின் ஊடாக இதனை போக்கமுடியும் எனக் கருதுகின்றார்.

இவர்அமெரிக்க,ஜேர்மன பணியாளர்களிடம் உள்ள குறிப்பான வேறுபாட்டை அவதானித்தார். பாலியல் முரண்பாடுகளில் உளவியல் பிரச்சினைகளைத் தேடியபோது அமெரிக்க பணியாளர் பாலியல் வாழ்க்கையைவிட தமது வேலை, பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து அதிகம் வருந்துவதாகக் குறிப்பிட்டார். இதனால் ஆளுமை விருத்தியில் சமூக,கலாச்சார காரணத்தை அழுத்திக்கூறினார். அத்தோடு ஆளுமை விருத்தியில் பெற்றோர்.பிள்ளைத் தொடர்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். மனித உறவுகளில் ஏற்படும் குழப்பங்களே உளவியற் பிரச்சினைகளிற்கு காரணம் என்றார். பிறருடன் பொருத்தப்பாட்டையும் பிரதான முன்று நுட்பங்களை இவர் விளக்கினார்.அதாவது இவரது கருத்திலே ஆளுமை குறித்த வகுப்பாளராக மூன்று வகையினர் காணப்படுகின்றர்

இந்த மூன்று பிரிவினரையும் கோனே அவர்கள் தன் சிகிச்சை அனுபத்தினை அடிப்படையாக வைத்து நோக்கி, பத்து வேறுபடத்தக்க கோலங்களை அவர்களிடத்தே அடையாளம் கண்டிருக்கின்றார். அவைகள் பின்வருமாறு அமைந்து காணப்படுகின்றது.

I. மக்களை/பிறரை நோக்கிய நகர்வு

1) அன்பும் ஆதரவும் மற்றவர்களை மகிழ்வூட்டல்,மற்றவர்களால் விரும்பப்படல்

2) பங்காளர்களின் தேவை விரும்பப்படுகின்றவர், பிரச்சினைகளிற்கு தீர்வு காண்பவர்.

**II.** மக்களிற்கு எதிரான நகர்வு/செயற்படுவோர்

3) சக்திக்கான தேவை மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் வலு

4) மற்றவர்களைச் சுரண்டுவதற்கான தேவை பொருத்தமாக ஏனையவர்களைப் பயன்படுத்து வதற்கான நம்பிக்கை

5) சமூக அங்கீகாரத்திற்கான தேவை மக்களிடையே கௌரவத்துடன் கூடிய கவனிப்பு

6) தனியாள் ஆச்சரியத்திற்கான தேவை அக மற்றும் புற தராதரங்கள் கணிப்பிடக்கூடிய தன்மை

7) தனியாள் சாதனைக்கான தேவை சாதனை படைக்கவேண்டும் என்ற எண்ணமும் முயற்சியும்

**III.** மக்களை/பிறரை விட்டு நகர்வு

8) சுய நிறைவுக்கான தேவையும் சுதந்திரமும்

9) பூரணத்துவத்திற்கான தேவை

10) வாழ்விற்கான அம்சங்களை வரையறுத்தல்

இவருடைய கருத்துப்படி ஆரோக்கியமான ஆளுமை உடையவர்கள் என்போர் இம்முன்று வெவ்வேறு வகையான தேவைகளை சமநிலைப் படுத்தக் கூடியவாறான நெகிழ்தன்மை உடையோர் ஆவர். இவை மூன்றும் ஒன்றை ஒன்று நிரப்புகின்ற போது இசைவான வாழ்க்கை காணப்படும். மாறாக இவற்றில் ஒன்று கூடுலாகக் காணப்படும்போது உளவியல் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் உருவாகின்றது. பெண்களின் ஆளுமை பற்றிய புரொய்ட்டின் விளக்கத்திலிருந்து கோனே வேறுபடுகின்றார். குறிப்பாக சிறுமிகள் தம்முடன் ஒத்த ஆண்பிள்ளைகளிடம் உள்ள உறுப்புக்கள் தங்களிடம் இல்லையென பொறாமை கொள்வதாக புரொயிட் கருதினார். ஆனால் சமூகத்தில் ஆண்களின் மேலாதிக்கமே

காணப்படுகின்றது. என் கோனே கருதினார். ஆண்கள் கருப்பைப்பொறாமை கொண்டிருப்பதாக கோனே கருதினார். அதாவது ஆண்கள் கருப்பையைப் பெறாதமையால் இனப்பெருக்கலில் பெண்களின் அளவுக்கு தாங்கள் பங்கு கொள்ளவில்லை என்ற பொறாமை அவர்களிற்கு இல்லையெனவும் இனப்பெருக்கலில் தனது சிறிய பங்களிப்பை வேலைகளினாலும் பிற செயற்பாடுகளினாலும் ஈடு செய்கின்றனர் என கோனே குறிப்பிட்டார்.

காலயுங் குறிப்பிட்டது போன்று கோனே உளவியல் ரீதியாக வளர்வதற்கான உந்துதலும் ஒருவர் தனது வலுவை எய்துதலும் அடிப்படை மனித ஊக்கங்கள் என வலியுறித்தினார்

பெண்கள் பற்றி பால் வேறுபாடு காட்டும் கண்ணோட்டத்தையே புரெய்ட் காட்டுவதாக பலர் உணர்ந்தனர். அதாவது இவரது கோட்பாடு ஆண் உளவியலை பிரதிநிதித்துவது ஆண்கள் உடற்கட்டு தசைநார் மிக்கவர்களாக இருப்பதால் பெண்களுக்கு தாழ்வுச்சிக்கல் ஏற்பட்டு பொறாமையும் கர்வமும் ஏற்படுவதாக கருதினார் புரெய்ட்டின் கோட்பாடானது ஆண்களுக்குரிய நியமங்களில் இருந்தன விலகல் நிலையாகவே பெண்களை நோக்குகின்றார். இவ்வாறு உளப்பகுப்பாய்வானது ஆண் உளவியல் நோக்கில் மேலாதிக்கம் பெறாதிருந்திருப்பின் பெண்கள் பற்றிய முற்றுமுழுதாக வேறுபாடான நோக்கு உருவாகியிருந்திருக்கும் என கோனே கூறியுள்ளார்.

கோனேயின் கோட்பாடானது அவரது சொந்த அனுபவங்களையும் சமுக காலாச்சார வலுக்களையும் அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டது. ஜேர்மனியில் பிறந்த கோனேஅவர்கள் ஐக்கிய அமரிக்காவுக்கு சென்று ஆய்வினை மேற்கொண்டிருந்தார். இங்கு ஜேர்மனியை விட முற்றுமுழுதாக நோயாளர்களின் மனப்பாங்கு வேறுபட்டு

இருந்ததை கண்டுகொண்டார் ஆளுமையென்பது தனியே உடலியியல் வலுக்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதை புரெய்ட்டும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார் இவ்வாறாக ஆளுமை என்பதற்கு கோனே,அல்பிரட்அட்லர் போல அதிக அளவு வலியுருத்தியமை சமூக உறவினை பிரதான காரணியாக குறிப்பிடுகின்றார்கள் மக்களானவர்கள் அன்பு மற்றும் பாதுகாப்பு தேவையின் நிமிர்த்தமே ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள் கோனே அவர்கள் தகப்பனாரின் அன்பையும் அதிகளவு நாடியபோதும் அது அவருக்கு கிடைக்காத தன்மை இங்கு புலப்படுகின்றது இவருக்கு சுய தியான சிந்தனை நன்னடத்தை பிரயோசனப்படவில்லை ஒரு வயது வந்த பெண்ணாகும் போது தன்னிடம் இன்மையாக காணப்பட்ட அன்பு மற்றும் ஆசை ஆளுமைக்கோட்பாட்டிற்கு வழிவகுத்ததாக குறிப்பிடுகின்றார். கோனே தனது சொந்த பகுப்பாய்வில் அட்லரின் தாழ்வுச்சிக்கல் உணல்வினை பெரிதும் செல்வாக்கிற்கு உட்படுத்தியுள்ளார்.

## References

Karen Horney's best book is **Neurosis and Human Growth** (1950). It is the best book on neurosis ever, in my humble opinion. She wrote more "pop" versions called **The Neurotic Personality of our Time** (1937) and**Our Inner Conflicts** (1945). Her thoughts on therapy can be found in **New Ways in Psychoanalysis** (1939). For an early insight into feminist psychology, read **Feminine Psychology** (1967). And to read about self-analysis read **Self-Analysis** (1942).

## பாடசாலையை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான அதிபரின் தந்திரோபாயங்கள்.

திருமதி.ஞா. கணேசநாதன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி

இன்று கல்விச் செயல் ஒழுங்கில் விஞ்ஞான ரீதியான புதிய உத்திகளும், முகாமைத்துவமும் பற்றிய நவீன சிந்தனைகளும் முக்கியம் பெறுகின்றது. இந்த நிலையில் பாடசாலை அதிபர் ஒருவரது வகிப்பங்குகள் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளன. அதிபர் ஒருவர் நிர்வாக அலுவலகர் என்ற பரிமாணத்திலிருந்து மாற்றம் பெற்று இன்று சமமானவர்களில் முதன்மையானவர் (First among Equals) என்ற பரிமாணத்தைப் பெற்றுள்ளார்.

அதிபரின் இப்பரிமாண விருத்தி நிலையானது அதிபர் ஓர் நிர்வாக அதிகாரியாக மட்டுமல்லாது அவர் ஓர் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் திகழ வேண்டும் என்ற நிலையை வலியுருத்துகின்றது.பாடசாலையை ஓர் கலாசார விளைநிலமாகவும்(Cultural Field), ஆசிரியர்களை ஆத்மாத்த நண்பர்களாகவும், மாணவர்களின் வளப்புத்தந்தையாகவும்(Foster Parent) அதிபர் செயற்பட வேண்டும்.

வினைத்திறன் (Effcient) என்பது பொதுவாக குறைந்த எத்தனங்கள் அல்லது முயற்சிகளுடனும், வளங்களுடனும்

உத்தம பயனைப் பெறத்தக்க வகையில் கருமங்களில் ஈடுபடுதலைக் குறிக்கும்.

வளங்கள் யாவும் வரையரைக்கு உட்பட்டவை என்பதால் அவற்றை சரியான செயல்கட்கு சரியாகப் பயன்படுத்துவதற்கும், அவற்றின் விரயத்தைத் தவிர்த்து உச்சப்பயனைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இதனால்தான் வினைத்திறன் என்பது வளங்கள் சரியாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்துவது தொடர்பான செயலாகும் எனக் கூறப்படுகின்றது.

ஓர் அதிபர் தன்னுடைய பாடசாலையில் கிடைக்கக்கூடிய வளங்களாகிய மனித சக்தி, இயந்திரங்கள், மூலப் பொருட்கள், நிதி, முறைமை, நேரம் மற்றும் தகவல் ஆகியவற்றை அவற்றின் வரையறைக்கு உட்பட்ட தன்மையினையும், கிடைப்பனவுத் தன்மையினையும், மாற்று உபயோகத் தன்மையினையும் கருத்திற் கொண்டு அவற்றை சரியான செயல்களுக்குச் சரியாகப் பயன்படுத்துதல் வேண்டும். இதன் போது இவற்றில் ஏற்படக்கூடிய விரயங்களைத் தவிர்த்து வளங்களின் உச்சப்பயனை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் பாடசாலையின் வினைத்திறன் உயர்வுக்கான தந்திரோபாயங்களை அதிபர் நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி பாடசாலையின் வெற்றியினை

உறுதிப்படுத்த முடியும்.

பாடசாலை ஒன்றின் மிக முக்கியமான ஒருவராக அதிபர் திகழ்கின்றார். விசேடமாக கற்றல் கற்பித்தல் செயன்முறைகளிலும் , ஏனைய எல்லா துறைகளிலும் தர விருத்தியை ஏற்படுவதற்கான தந்திரோபாயங்களை வகுத்து நடைமுறைப்படுத்துபவராக அதிபர் காணப்படுகின்றார்.

ஒரு பாடசாலையின் உயர்ச்சியும், வீழ்ச்சியும் அப்பாடசாலையைத் தலைமைதாங்கி வழிநடத்தும் அதிபரின் ஆற்றலில் தங்கியிருக்கின்றது என அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு பாடசாலையின் முழுப்பொறுப்புக்களையும் தமது தோள்களில் சுமந்து எதிர்ப்பார்க்கப்படும் இலக்கை நோக்கி நிறுவனத்தை இட்டுச் செல்பவர் அதிபரே ஆவார். இவர் ஓர் கற்பித்தல் தலைவர் என்ற வகையில் உயர்ந்த எதிர்பாப்புக்களை பாடசாலை அடைந்து கொள்ளும் வண்ணம் உகந்த சூழலை உருவாக்கிக் கொள்வார். அதிபரது இயக்கமுள்ள தலைமைத்துவ வழிநடத்தலானது ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்தி பாடசாலையின் நோக்கங்களை வினைத்திறனுடன் அடைந்து கொள்வதற்கு வழிவகுக்கின்றது. தற்கால ஒருவர் அதிபர் முகாமையாளராகவோ அன்றி நிர்வாகியாகவோ கருதப்படாது இவர் ஓர் உருமாற்றம் செய்யும் தலைவராகவே (Transformational Leader) கருதப்படுகின்றனர்.

அதிபர் தோழமை உணர்வும் (Collegiality), கூட்டிணைவும் (Collaboration) கொண்ட தொழிற்சூழலைப்

பேணி ஆசிரியர்களுக்கு வலுவூட்டுதலை (Empowerment of Teachers) மேற்கொள்வதன் மூலம் வினைத்திறன் அதிகரிப்பினை முன்னெடுப்பார்.

அதிபர் உற்சாகமளிக்கும் தலைவராக (Cheerleader) செயற்பட்டு இதன் மூலம் தனது ஆசியர்களது அணிச்செயற்பாடுகளை (Team Activities) உற்சாகப்படுத்துவார். ஆசிரியர்களது பயன்மிக்க செயற்பாடுகளுக்கும், முன்னேற்றத்திற்கும் பாடசாலை நலன்விரும்பிகளதும், ஆதரவாளர்களதும், பழைய மாணவர்களதும், பெற்றோர்களதும் ஆதரவைப் பெற்றுக் கொடுக்கின்ற இணைப்பாளராக வினைத்திறன் அதிகரிப்புக்கான தனது தந்திரோபாயப் பங்களிப்பை நல்குவார். இதன் மூலம் அதிபர் ஆர்வம் மிக்கவராகவும் (Enthusiastic) எதிலும் நலன் காண்பவராகவும் (Optimistic) இருப்பதோடு வெற்றிகளைக் கொண்டாடியும், தோல்விகளுக்கு வருத்தம் தெரிவித்தும் ஆதரவளிப்பவராக அதிபர் திகழவேண்டும்.

பாடசாலை ஆளணியினரின் வாண்மை விருத்திக்கு உற்சாகமளிப்பவராக அதிபர் விளங்குவார். ஆசிரியர்களை செயல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டி அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பார். ஆசிரியர்கள் ஈட்டிய பெறுபேறுகளையும், எதிர்கொண்ட இடர்பாடுகளையும் இனங் கண்டு கொள்வார். ஒவ்வொரு ஆசிரியரையும் மேம்படுத்தும் வகையில் அவர்களுக்குப் பொருத்தமான சில குறிப்பிட்ட

கருத்தரங்குத் தொடர்கள், ஆய்வரங்குகள் என்பவற்றுக்கு உற்சாகப்படுத்தி அனுப்பி வைப்பார். மேலும் சில ஆய்வுக் கட்டளைகளையும், சஞ்சிகைகளையும் வாசிக்கத் தூண்டுபவராவர். புதிய புதிய விடயங்களை ஆசிரியர் முயற்சித்துப்பார்ப்பதற்கும் அதன் பின்னூட்டல்களை சக ஆசிரியர் மத்தியில் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் அறிவுரை வழங்கவும், பயிற்சியளிக்கவும் சிசைப்படுத்தி விசைப்படுத்துவார். சகபாடிப் பயிற்சியளிப்பாளர்களாக (Peer Coaches) தொழிற்படும் நிலையில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து பாடசாலைச் சமூகத்தின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் ஆசிரியர் வாண்மை விருத்திக்குப் பெற்றுக் கொடுப்பார். இதன் மூலம் ஆசிரியர்கள் தமது வரையறைக்குட்பட்ட பரப்புக்களில் சுதந்திரமாக தீர்மானம் மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க அவர்களை ஊக்குவிப்பார்.

சூழலைப் பற்றியும் அதிலுள்ள வளங்களைப் பற்றியும் நிறைந்த அறிவைக் கொண்டவராக அதிபர் விளங்குவார். தான் நீண்ட காலமாக ஒன்று திரட்டிய செய்தியையும், அனுபவங்களையும் பயன்படுத்திப் பல விடயங்களை நுட்பமாகவும், துல்லியமாகவும் அதிபர் கையாள்வார். இதன் மூலம் ஓர் வித்தகராகவும், கருமங்களை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டுபவராகவும் அதிபர் திகழ்வார். கிடைக்கக் கூடிய வளங்களையும், அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறிந்து அவற்றை பாடசாலைக்குப்

பெற்றுப் பயன்படுத்தும் உத்திகளை அதிபர் செயற்படுத்துவார்.

அதிபர் ஓர் கட்டடக்கலைஞரைப் (Architect) போல் புதிய எண்ணங்களுக்கு செயலுருக் கொடுப்பவராகத் திகழ்வார். தொலைநோக்கோடும், கனவுகளோடும் கூடிய மங்கலானதும், திடத்தன்மையற்றதுமான தனது கருத்துருவங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் கட்டடக் கலைஞரைப் போல அதிபரும் பாடசாலையின் வினைத்திறன் அதிகரிப்புக்கான கருத்துருவங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பார். பாடசாலையின் வினைத்திறன் அதிகரிப்புக்கு உதவக்கூடிய கருத்துக்கள் தொடர்பாக பிறர் தமது விருப்பங்களைத் தெரிவிக்கையில் அவற்றைச் செவிமடுத்து அதனை நிறைவேற்றக் கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார். அதிபர் வளங்கள் பற்றிய அறிவையும் படைப்பாற்றலையும் தன்னைச் சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்து ஓர். அணியாகச் செயற்பட்டு பாடசாலையின் வினைத்திறன் உயர்வுக்கு உதவுவார். இதன் மூலம் பணிகள் யாவும் குறித்தகால வரையறையில் தரம் மிக்கதாக மேற்கொள்ளப்படுவதை அதிபா உறுதி செய்வார். இந்த வகையில் சமூகத்தில் பாடசாலையின் குறித்த தொலைநோக்கிற்கும், கனவிற்கும் செயலுருவம் கொடுப்பவராக அதிபர் திகழ்வார்

அதிபர் பாடசாலை ஆளணியினருள் முதன்மை யானவராகவும், முக்கியமானவராகவும் திகழ்ந்து பாடசாலையின் தொலை நோக்குப் பற்றிய தெளிவான விளக்கங்களைப்

பாடசாலைச் சமூகத்தில் ஏற்படுத்துவார். நோக்கத்தினால் அல்லது குறிக்கோளினால் முகாமை செய்தல் (Management by objective) என்பதனைக் கடைப்பிடித்துக் கூட்டிணைவு அணுகு முறையினை (Collaborative Approach) பாடசாலைச் சமூகத்தின் மத்தியில் தோற்றுவிப்பார். குறிப்பாக பெற்றோர்களதும் பழைய மாணவர்களதும் நம்பிக்கையினைப் பெற்று நிபுணத்துவ ஆலோசகராக செயற்படுவார். இதன் மூலம் பாடசாலையின் கடந்தகால பாரம்பரியத்தையும் , நன்மதிப்பினையும் தொடர்ந்து பேணுவதோடு எதிர்காலத்தில் பாடசாலை முகங்கொடுக்க வேண்டிய சவால்களுக்கு தொலைநோக்குடன் திட்டங்களை வகுத்து பாடசாலை சமூகத்தின் பங்களிப்போடு முன்னெடுப்பார்.

பாடசாலையின் வினைத்திறன் விருத்தி என்ற வகையில் பாடசாலைமட்ட முகாமைத்துவம் (School base Management) என்ற புதிய நிர்வாக அணுகு முறையில் அதிபர் தமது தந்துரோபாயப் பங்களிப்பை நல்குவார். இதன்படி ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு முகாமைத்துவ சபை உருவாக்கப்படும் இதன் பிரதான பங்காளராக அதிபர் செயற்படுவார். இந்நிர்வாக முறையில் தர உள்ளீடுகள் (Quality Inputs) என்ற வகையில் பாடசாலைகளுக்கு நிதி நேரடியாக வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் தற்போது வழங்கப்படுவதைப் போல் 5மடங்கு நிதி அதிகரிப்பு இடம் பெறவுள்ளது. மேலும் பாடசாலைகளுக்கு வேறு வழிகளிலும் நேரடியாக நிதி வழங்குவதற்கு உத்தியோகிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஆங்கிலப் பாட அபிவிருத்தி, உடற்கல்வி ஆசிரியருக்கான கொடுப்பனவு

போன்ற நிதிகளைக் குறிப்பிடலாம். எதிர்காலத்தில் ஆசிரியர் சம்பளமும் பாடசாலை மட்டத்திலேயே நிர்வகிக்கப்படுவதற்கு முன்மொழிவுகள் காணப்படுகின்றது. இதனால் அதிபர் சிறந்த நிதி முகாமைத்துவ ஆற்றல்களை பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் பிரயேகிக்க வல்லவராகத் திகழ்ந்து பாடசாலையின் வினைத்திறன் உய்வுக்குப் பங்களிப்பு நல்க முடியும்.

மேற்படி தந்திரோபாயங்கள் யாவற்றையும் பாடசாலையென்றில் அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளைக் கருத்திற் கொண்டு களநிலைமை களுக்கேற்றவாறு முன்னுனர்தலுடன் திட்டமிட்டு பிரயோகிககும் ஆற்றலுடைய அதிபர் தமது பாடசாலையின் வினைத்திறன் அதிகரிப்புக்கு சுதந்திரமான பங்களிப்பை நல்குபவராக கருதப்படுவார்.

# நேர்மனப்பாங்கும் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களின் ஆளுமை விருத்தியும்

ந.ஞானவேல்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

தனி மனிதர் ஒருவர் நேர் மனப்பாங்குடன் செயற்படுவதன் மூலம் அவரது ஆளுமையானது மேலும் விருத்தியடைவதாக தற்கால உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் சகல தொழில்சார் வர்க்கத்தினரும் தமது தொழிலில் தேர்ச்சியுடைவர்களாக துலங்குவதற்கு அவர்கள் நேர் மனப்பாங்குடையவர்களாக பயிற்றுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் ஆசிரிய பணிக்காக தேசிய கல்வியற் கல்லூரிகளினூடாக பயிற்றுவிக்கப்படுகின்ற முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் நேர் மனப்பாங்குடனான ஆளுமையை தம்மிடத்தில் விருத்தியாக்க வேண்டும் என யுனஸ்கோ அறிக்கைகள் அண்மைக்காலமாக வலியுறுத்தி வருகின்றன.

அந்த வகையில் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களது ஆளுமை விருத்திக்கு நேர்மனப்பாங்கு இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. ஆளுமையை ஒருவரிடத்தில் விருத்தியாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக குடும்பற் சூழல் என்பன

வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுள் குடும்பத்தைவிட சூழல் காரணிகளே அதிகம் ஆளுமை விருத்தியில் செல்வாக்கு செலுத்துவதாகக் கருதப்படுகிறது. தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் சூழல் தொடர்பாக எத்தகைய நேர்மனப்பாங்கும் அது சார்பான இடைவினையும் கொண்டுள்ளார்களோ அதன் வழி அவர்களது ஆளுமையும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆதலால் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் வினைத்திறனுள்ள ஆசிரியராக தாம் திகழ்வதற்கும் அது சார்பான ஆளுமைப் பண்புகளை தம்மிடத்தே விருத்தியாக்கிக் கொள்வதற்கும் நேர்மனப்பாங்கு இன்றியமையாதனவாக அமைகின்றன. அவை வருமாறு அமைகின்றன.

### 1. ஆராயும் மனப்பாங்கு

முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களது நேர்மனப் பாங்குடனான ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புவதில் முதலாவது அம்சமாக அவர்கள் எவற்றையும் ஆராய்ந்து தெளிவு பெறுகின்ற மனப்பாங்கை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. அதாவது தமது பணிக்கு உட்பட்ட சூழலை நன்கு ஆராய்ந்து அதன் பல தரப்பட்ட அம்சங்கள் சார்பாகவும் விளக்கம் பெற்று அதுசார்பான நேர்மனப்பாங்குகளை தம்மிடத்தில் கட்டி எழுப்பும் போது அவர்களது கற்பித்தல் பணி இலகுபடுத்தப்படுகிறது. அத்தோடு அவர்கள் கற்பித்தலை நேசிக்கவும் அதற்காகத் தம்மை அர்ப்பணிக்கவும் தமது பாடவிடயங்கள் சார்பான நேரான மனப்பாங்குகளை காலத்துக்குக் காலம் கட்டியெழுப்ப இது உதவுகின்றது.

## 2. அறிவுத்திறன்

தேசிய மற்றும் தேச மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அறிவு சார்பான விடயங்களை முகிழ்நிலை ஆசிரிய மா்ணவர்கள் தேடி அறிவதும் அதுசார்பான தமது அறிவினை மேலும் மேலும் விருத்தி செய்து கொள்வதற்கும், அறிவுத் தேடலினூடாக சமநிலையான ஆளுமை உடையவர்களாக மாற்றம் பெறுவதற்கும் இந் நேர்மனப்பாங்கு இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது.

## 3. சிந்திக்கும் ஆற்றல்

தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் தமது ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கும் மற்றுமொரு காரணியாக சிந்திக்கும் ஆற்றல் காணப்படுகின்றது. அதாவது தமது கல்வி புலம் சார் பிரச்சினைகள் எழும்போது அதுசார்பான சிந்தனைகளை முன் வைத்தல், தீர்மானங்களை மேற்கொள்ளல் அவற்றினை துரிதமாக நடைமுறைப்படுத்தல் என்பன இங்கு எதிர்பார்க்கப்படுகின்ற நேர்மனப்பாங்குகளாகும்.

## 4. தொடர்பாடல் திறன்

சிறந்த தொடர்பாடல் திறன் மூலம் குறித்த தகவல்களை விரைவாக விளங்கிக் கொள்வதற்கும் அதற்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களுக்கு தொடர்பாடல்த் திறன் உதவுகின்றது. அத்தோடு சிறந்த அடைவை அடைவதற்கும் தாம்

விரும்புகின்றவர்களோடு இணைந்து வினைத்திறனான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த தொடர்பாடல்த் திறனைப் பெற்று இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

**5. கொள்கை சார் மனப்பாங்கு**

முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் நேர்மனப்பாங்கை விருத்தி செய்து கொள்வதற்கு ஏற்புடையதாக குறித்த கற்றல் இலக்குகளுக்கு பொருத்தப்பாடுடைய கொள்கைகளை விளங்கிக கொள்வதும் அதுசார்பான உறுதிப்பாடுடையவர் களாகவும் விளங்க வேண்டும் என இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. அத்தோடு தனிநபர், குழுக்கள், சமூகம் என்ற பல தரப்பினரோடும் தொடர்பு கொண்டு குறித்த விடயம் சார்பான தத்துவார்த்த ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்ளவும் அது சார்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் கொள்கை சார் மனப்பாங்கு இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது.

**6. திறந்த மனப்பாங்கு**

முகிழ்நிலை ஆசிரியர்கள் தாம் சார்ந்த சமூகத்தினது பாரம்பரியங்கள், மற்றும் விழுமியங்களை விளங்கிக் கொள்ளவும் அவற்றை திறந்த மனப்பாங்குடன் ஏற்றுக் கொள்ளவும் அவர்களது ஆளுமை விருத்திக்கு இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது.

அத்தோடு பலதரப்பட்ட சமூகத்தவரது கலாசாரங் களையும், வரலாறுகளையும் திறந்த மனப்பாங்குடன் அவற்றை

மதித்து அதற்கு ஏற்ப ஒழுகுவதற்கு அவருக்கு நேர்மனப்பாங்கு அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. மேலும் தனது அனுபவங்களை ஏனையவரோடு பகிர்வதற்கும் இம் மனப்பாங்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது.

## 7. மாற்றங்களை விளங்கிக் கொள்ளல்

சூழலில் ஏற்படும் நேரான அல்லது எதிரான மாற்றங்களை விளங்கிக் கொள்வதும், அதன்போது நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள் பற்றியும் முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தோடு மாற்றங்கள் ஏற்படுவதைக் கண்டு விமர்சனம் செய்யாது காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றம் பெறும் சிந்தனைகளுக்கு அமைய அச் சிந்தனைகளை தாமும் உள்வாங்கி தம்மை இற்றைப்படுத்திக் கொள்வதன் மூலம் தமது ஆளுமையை விருத்தியாக்கக் கூடியதாகவுள்ளது.

## 8. ஆபத்துவேளைகளில் நடந்து கொள்ளல்

அனர்த்தம் மற்றும் ஆபத்துவேளைகளில் முகிழ்நிலை ஆசிரிய மாணவர் ஒருவர் எத்தகைய நேர் மனப்பாங்கை கொண்டு தொழிற்பட வேண்டும் என்பதை இது வலியுறுத்துகின்றது. குறித்த அனர்த்த வேளையில் தானும் தான் சார்ந்தவர்களையும் அதில் இருந்து மீட்பது எவ்வாறு அதன் போது அவரது புதிய தொழிற்பாட்டுக் கூறு சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் செயற்படுதல் துரிதமான தீர்மானங்களை எடுத்து அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளும் முறைமை என்பன இவ் நேர்மனப்பாங்கின்

ஊடாக ஆசிரிய மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 9. சமநிலைப்பாங்கு

முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் தனிப்பட்ட உடல், உள, மனவெழுச்சி நிலைமைகளில் தமது சமநிலையான ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு நேர்மனப்பாங்கு இன்றியமையாத ஒன்றாக வலியுறுத்தப்படுகின்றது. மேலும் சகல நிலைமைகளிலும் சமநிலையான தன்மையை பேணிக் கொள்வதற்கான வழிவகைகள், தனிநபரோடும் சமூகத்தோடு தொடர்பு கொள்ளும் போது சமநிலையை பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள் என்பவற்றை ஆசிரிய மாணவர்கள் நன்கு விளங்கி அதன் ஊடாக சமநிலையான ஆளுமையை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 10. பிரதிபலிப்பு

முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் தமது கற்பித்தல் ஒருமைப்பாட்டினால் கற்பித்தல் செயலொழுங்குக்கு உதவுபவர்களை விளங்கி அவர்களது செயற்பாடுகளை கட்டுப்படுத்தி தனது சுய கற்பித்தலை விருத்தி அடைவதற்கும் அதன் வாயிலாக தன்னை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கும் இச் செயற்பாடு வழிவகுக்கின்றது. எனவே ஆசிரிய மாணவர்கள் தம்மிடத்தில் இலை மறை காய்களாக இருக்கும் திறமைகளை வெளிப்படுத்துவதில் நேர்மனப்பாங்குடன் செயற்படுத்துவதன் மூலம் தமது ஆளுமையை விருத்தியாக்க வழிவகுக்கின்றது.

மேற்படி அம்சங்கள் மாத்திரமன்றி சாதி, குல, மத, இன பிரதேச வேறுபாடுகளை கடந்த நேர்மனப்பாங்கு, மாணவர் மையக் கற்பித்தலை அதாவது பிள்ளை நேயத்தை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைமையை மேற்கொள்வதற்கான நேர்மனப்பாங்குகளைக் கொண்டு இருத்தல், முதலான அம்சங்களிலும் ஆசிரிய மாணவர்கள் சிறப்பான ஆளுமையுடையவர்களாக விளங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தன்னை மையமாகக் கொண்டு முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது ஆளுமைப் பாங்கை கட்டி எழுப்புதல் அவசியம் என கூறப்படுகின்றது. அதாவது தான் ஒரு இடத்துக்கு மாத்திரமே உரித்துடையள் எனது சேவை மட்டுப்படுத்தப்பட்டது வரையறைக்குட்பட்டது என குறுகிய நோக்கில் எண்ணாது அனைவருக்கும் சேவைகிடைக்கத்தக்க வகையில் செயற்படுதல், ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய நேர் மனப்பாங்கு, என்னால் எதையும் இயன்றவரை ஆற்ற முடியும் என்ற நேர்மனப்பாங்கு என்றவாறான மனப்பாங்குகளை தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் ஒவ்வொரு முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களும் தம்மிடம் வளர்த்துக் கொள்ளும் போது தேசிய சர்வதேச இலக்குக்கேற்ப அவர்கள் சிறந்த ஆளுமையுடைய ஆசிரியர்களாக மாற்றம் பெறுவதற்கு துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

# இலங்கையில் சிறுவர் நேயப் பாடசாலை

திருமதி.யெ.தியாகலிங்கம்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## அறிமுகம்

இரம்மியமான பிள்ளைப்பருவக் காலத்தை வெற்றிகரமான அனுபவங்கள் நிறைந்த ஒரு சூழலாக மாற்றுவது, பாடசாலையினால் மேற்கொள்ளப்படுகின்றது. பிள்ளை பாடசாலைக்குச் செல்வது என்பது கற்றவற்றை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ளல், வாழ்க்கைத் திறன்களை விருத்தி செய்து தமது திறன்களை வளர்த்துக் கொள்ளல், எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதற்கான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றிற்கு அமைவாக ஆரம்பக் கல்விப் பாடசாலையை உருவாக்குவது ஒவ்வொரு சமூகத்தினதும் பொறுப்பாகும். இதற்கான உபாயமே சிறுவர் நேயப்பாடசாலை ஆகும்.

சிறுவர் நேயப் பாடசாலையானது விருப்பு மிக்கதும், பாதுகாப்பும், கவனிப்பும், நிறைந்ததும் அனைத்து மாணவர்களினதும் ஆற்றல்களை உச்ச அளவில் விருத்தி செய்வதற்கான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதுமான இடமாகும்.

## இலங்கையில் சிறுவர் நேயப் பாடசாலை எண்ணக்கரு உருவாக்கம்

இலங்கையின் கல்வி வரலாற்றில் சிறுவர் நேயப்

பாடசாலை எண்ணக்கருவிற்கு நீண்ட வரலாறு இருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. இதன் முதல் வித்தாக, 1939, 31ம் இலக்கக் கல்விச் சட்டம் மூலம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிக்கும் போது, பிள்ளையின் அல்லது பிள்ளையின் தந்தையின் சாதி, மதம், குலம், கோத்திரம், சமூக அந்தஸ்து மற்றும் மொழி என்பவற்றைக் கவனத்திற் கொண்டு அனுமதி மறுக்கப்படலாகாது எனத் தெரிவிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். 1997, 25ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1998ம் ஆண்டு முதல் 5 - 14 வயது வரையிலான சிறார்களுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது.

1945 இல் கல்வி அமைச்சராக இருந்த கௌரவ C.W.W.கன்னங்கரா அவர்கள் முன்வைத்த இலவசக் கல்விச் சட்டம் மூலம் ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசமாகக் கல்வி பெறும் உரிமை வழங்கப்பட்டமை இலங்கைச் சமூகம், கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பிருந்தே கவனம் செலுத்தியதை அறியக்கூடியதாக உள்ளது. 1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயகம் சோசலிசக் குடியரசு யாப்பின் மூலம் கல்வியைப் பெறுவது மக்களது அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அனைத்து மட்டங்களிலும் கல்வியின் சமவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலை சிறுவர்களுக்கும் இலவசபாட நூல் வழங்குதல், இலவச சீருடை வழங்குதல் போன்ற கொள்கைகள் மூலம் அனைத்துப் பிள்ளைகளும் இலவசக்

கல்வி பெறுவதற்கான உரிமையினை உறுதிப்படுத்த அரசு முனைகிறது.

'அனைவருக்கும் கல்வி' தொடர்பான ஜொம்ரியன் மகாநாட்டு அறிக்கை (1990) மூலம் சமூகத்தில் சகல மட்டங்களிலுமுள்ள சகல பிரஜைகளுக்கும் கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்தியமை சிறுவர் நேயப் பாடசாலை எண்ணக்கருவினை மேம்படுத்திய இன்னுமொரு சந்தர்ப்பமாகும்.

தொடர்ந்து 1972ம் ஆண்டு கல்வி மறுசீரமைப்புக்கேற்ப ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்து கற்பிக்கும் தன்மையுடன் சுருளி முறைமையும் செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை சிறுவர் நேயப் பாடசாலையின் பண்புகளாகக் காணப்பட்டன.

அவ்வாறே 1998ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தில், தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டத்தின் செயற்பாட்டுடன் கூடிய கற்றல் முறையினால் ஆரம்பக் கல்வித்துறை வலுவூட்டப்பட்டதுடன் 'அனைவருக்கும் கல்வி' என்ற இலக்கு நோக்கி நகர்வதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது.

மேலும் 2007ஆம் ஆண்டு ஆரம்பக்கல்வியில் திருத்தம் செய்யப்பட்ட விடயங்கள் மேற்குறிப்பிட்ட நிலைமைகள் மேலும் விருத்தி பெறக் காரணங்களாக அமைந்துள்ளன.

**சிறுவர் நேயப் பண்பை வளர்த்தல்**

பாடசாலையில் சிறுவர், நேயப் பண்பை வளர்த்தல் தொடர்ச்சியாக நடைபெற வேண்டியதொரு செயல்முறையாகும். இதற்கேற்ப சிறுவர் நேயப் பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தினைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டியது, பாடசாலை அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் சகலரினதும் கடமையாகும். எனவே அனைத்துப் பாடசாலைகளிலும் தற்போதைய நிலைமையை இனங்கண்டு அபிவிருத்தி செய்வதே சிறுவர் நேயப் பாடசாலை வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்விலக்கினை அடைவதற்காக கல்வி அமைச்சினதும் வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தினதும் மேற்பார்வையின் கீழ் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் 2002ஆம் ஆண்டு வடமேல் மாகாணத்தில் 124 பாடசாலைகளில் முன்னோடி வேலைத்திட்டமாக சிறுவர் நேயப் பாடசாலை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இவ் வேலைத்திட்டத்தினால் மாணவர் நாளாந்த வரவு அதிகரித்தமை, பாதுகாப்பான, சுகாதார வசதிகள் கொண்ட பாடசாலைச் சூழல் உருவாக்கம், வருடாந்த வைத்திய பரிசோதனைகள் இடம்பெற்றமை, சுகாதாரப் பிரச்சினை களுக்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்தியமை பாடசாலை சமூகத்தின் பங்குபற்றலில் இணைந்து செயற்பட்டமை, பாடசாலை எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு வெற்றிரமாக முகங்கொடுத்தமை போன்ற அபிவிருத்திப் பண்புகளை அப்பாடசாலைகளில் காணக்கூடியதாக இருந்தன.

2004ஆம் ஆண்டில் இவ் வேலைத்திட்டம் நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் விரிவாக்கப்பட்டு 1400 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்பாடசாலைகள் சிறுவர் நேயப் பண்புகளை அடையுமுகமாக பல உத்திகளைப் பயன்படுத்தி அபிவிருத்தியை அடைந்துள்ளன. கல்வி அமைச்சின் மூலம் சிறுவர் நேய எண்ணக்கருவினை தேசிய கல்வி உத்தியாக ஏற்றுக் கொண்டு இலங்கையின் சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச் சிறுவர் நேய எண்ணக்கருவினை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவையாவன,

- ♣ சிறுவர்நேய எண்ணக்கரு தொடர்பாக எழுதப்பட்ட நூல்களை வெளியிடுதல்.
- ♣ அதிபர், ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்
- ♣ பெற்றோர்களை வலுவூட்டல்
- ♣ பாடசலைக்குத் தேவையான பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

இவ் வேலைத் திட்டத்தினைக் கண்காணிப்பது தொடர்பாக கண்காணிப்புப் படிவங்களை அறிமுகப்படுத்தல் போன்றவை சிலவாகும்.

இதனடிப்படையில் 2015ஆம் ஆண்டில் இலங்கையில் எல்லாப் பாடசாலைகளும் சிறுவர் நேய எண்ணக்கருவைப்

பாதுகாக்கும் பாடசாலைகளாக ஆக்கும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள அனைவரதும் பங்களிப்பு அவசியமானதாகும்.

**சிறுவர் நேயப் பண்பினை விருத்தி செய்தல்**

பாடசாலைகளில் சிறவர் நேயப்பண்பினை விருத்தி செய்வது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டியதொரு செயற்பாடாகும். இதற்காக ஆறு பரிமாணங்களைக் கொண்ட ஒரு மாதிரி இனங்காணப்பட்டுள்ளது. இவ் ஆறு பரிமாணங்கள் பல்வேறு நிலைகளில் உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒவ்வொரு பாடசாலையும் தற்போது காணப்படும் நிலைமையை இனங்கண்டு மேற்படி பரிமாணங்களின் வழியே நியமங்களைக் கட்டியெழுப்பி விருத்தியடைவதே எதிர்பார்ப்பாகும். மேற்படி ஆறு பரிமாணங்களும் நியமங்களும் பின்வருமாறு,

1. முதலாவது பரிமாணம் - உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமான வகையில் உட்படுத்தல்.

1.1 நியமம்: பாடசாலையில் இருந்து இடைவிலகுவதைத் தடுப்பதற்கும் பாடசாலை செல்லாத பிள்ளைகள் தொடர்பாகத் தேடியறிவதற்கும் துலங்கல் காட்டுவதற்கும் பயனுறுதியுடைய பொறிமுறை உள்ளது. அப்பொறிமுறை செயற்படுகின்றது.

1.2 நியமம்: பாடசாலையில் காணப்படும் செயற்பாடுகளில் கலந்து கொள்வதற்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் சகல பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்பு உண்டு.

1.3 நியமம்: உடல், உளத் தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பயமுறுத்தல், தொந்தரவு செய்தல், போன்றவற்றைத் தடுப்பதற்கான செயன்முறைகளும் அவற்றுக்குத் துலங்கள் காட்டுதலும் உண்டு.

1.4 நியமம்: சிறுவர் உரிமை தொடர்பாக ஒட்டுமொத்த பாடசாலைச் சமூகத்தினரும் அறிவூட்டம் பெற்றுள்ளனர். அவ்விணக்கத்துடனேயே பாடசாலையின் செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன.

2. இரண்டாவது பரிமாணம் - ஆண், பெண் சமூகவியல்புகளில் கவனம் செலுத்த வேண்டும்.

2.1 நியமம்: ஆரம்பக் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கும் இடைநிலைக் கல்விக்குப் பிரவேசிப்பதற்கும் உதவுமுகமாக பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றது.

2.2 நியமம்: பாடசாலையில் சகல செயற்பாடுகளின் போதும் (கலைத்திட்டம், இணைப்பாட விதானம்) பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் சமமான அடிப்படையில் பங்குபற்றுகின்றனர்.

2.3 நியமம்: பாடசாலையில் பௌதீக வளங்கள் பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் பொருத்தமான விதத்தில் காணப்படுகின்றன.

3. மூன்றாவது பரிமாணம் - பிள்ளைகளின் கற்றல்

பேறுகளை விருத்தி செய்தல்.

3.1 நியமம்: கற்றலுக்கு உதவுவதற்காக மனித வளங்களும் வகுப்பறை வசதிகளும் போதுமான அளவில் உள்ளன.

3.2 நியமம்: வகுப்பறைச் சூழல் உட்டுத்தல் முறையில் அமைந்துள்ளது. அழுத்தங்கள் கிடையாது. சனநாயக ரீதியானது கற்றலுக்குப் பொருத்தமானது.

3.3 நியமம்: பிரதேச சூழல், பண்பாடு போன்றவை பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பாடசாலைக் கலைத்திட்டம் பொருத்தமாக இசைவாக்கப்பட்டுள்ளது.

3.4 நியமம்: வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்களினூடாகச் சுய ஆர்வத்துடன் ஆசிரியர்கள் தமது திறன்களைத் தொடர்ச்சியாக விருத்தி செய்து கொள்வார்கள்.

3.5 நியமம்: கற்பித்தலின் போது மாணவர் மையக் கற்பித்தல் முறை பயன்படுத்தப்படும்.

3.6 நியமம்: அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள், முறையாக கணிப்பீடு செய்யப்படுகின்றன. சகல மாணவர்களும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பாண்டியத்தை அடையச் செய்வதற்காக பயனுள்ள வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4. நான்காவது பரிமாணம் - பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் கவனிப்பையும் உறுதிப்படுத்தல்.

4.1 நியமம்: சுகாதாரம், கவனிப்பு, பாதுகாப்புத் தொடர்பாகப் பாடசாலை மட்டத்திலான கொள்கைகள் உண்டு.

4.2 நியமம்: உணவு, நீர், கழிவகற்றல் போன்றவை தொடர்பாக பாடசாலையில் போதுமானளவு வசதிகள் உண்டு.

4.3 நியமம்: உணவு, நீர், கழிவகற்றல் வசதிகளோடு பாடசாலைச் சூழல் பாதுகாப்பானதாகப் பேணிவரப்படுகிறது

4.4 நியமம்: மாணவர்களுக்கான தேர்ச்சி மைய சுகாதாரக் கல்வி பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

4.5 நியமம்: பயனுறுதியுள்ள உள சமூக உதவியும் வழிப்படுத்தும் சேவைகளும் உள்ளன. அவை பயன்படுத்தப்படுகின்றது.

4.6 நியமம்: துன்புறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள், அழுத்தங்கள் போன்றவற்றிலிருந்து பிள்ளைகள் பாதுகாப்பாக உள்ளனர்.

4.7 நியமம்: அனர்த்த முகாமைக்காக திட்டமிட்ட முன்னாயத்தம் உண்டு. அது நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

5. ஐந்தாவது பரிமாணம் - மாணவர், குடும்பம், மற்றும் சமூகத்தின் உயிரோட்டமான பங்களிப்பு

5.1 நியமம்: மாணவர்கள் குடும்பங்கள், சமூகத்தினர் போன்றோரின் பயனுள்ள பங்களிப்புடன் சுயகணிப்பீடு இடம் பெறுவதுடன் பாடசாலை

அபிவிருத்தித் திட்டமும் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

5.2 நியமம்: பாடசாலை அபிவிருத்தித் திட்டம் (SDP) நடைமுறைப்படுத்தப்படும் போது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், குடும்பம், சமூகம் போன்றோர் பங்களிப்புச் செய்கின்றனர்.

5.3 நியமம்: பாடசாலை அபிவிருத்தி திட்டம் (SDP) கண்காணிப்பின் போதும் மதிப்பீடு செய்யப்படும் போதும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், குடும்பம், சமூகம் போன்றோர் பங்களிப்புச் செய்கின்றனர்.

5.4 நியமம்: சிறுவர் நேய, வீடு, சமூக, சூழல் போன்றவற்றின் மேம்பாட்டிற்காகப் பாடசாலை உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்கிறது.

6. ஆறாவது பரிமாணம் - சிறுவர் நேயக் கொள்கைகள், முறைமைகள், ஒழுங்குவிதிகள், ஊடாக உதவி பெறல்.

6.1 நியமம்: அரச கொள்கைகளும், சட்டதிட்டங்களும் அவற்றை நடைமுறைப்படுத்தலும், சிறுவர் நேயப் பாடசாலை அபிவிருத்திக்கு உதவும்.

6.2 நியமம்: குறித்த சகல அரச நிறுவனங்களுக்கிடையில் சகல நிலைகளிலும் பயனுள்ள இணைப்பு காணப்படும்.

6.3 நியமம்: நிதிவளங்கள் பல்வேறு நிலைகளிலும் பொருத்தமாகப் பயன்படுத்தப்படும்.

6.4 நியமம்: சகல நிலைகளிலும் தரமான தொழில்நுட்ப

உதவித் தொகுதிகள் காணப்படும்.

6.5 நியமம்: கலைத்திட்டத்திலும், பாடசாலைகளிலும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலும் சிறுவர் நேயக் கோட்பாடு அடங்கியிருக்கும்.

சிறுவர் நேயப் பாடசாலையை விருத்தி செய்வதன் முக்கிய பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்ததாக இருப்பதுடன் ஆசிரியர்கள் இவ்வெண்ணக்கரு தொடர்பான பாண்டித்தியத்தையும் பெற்றிருக்க வேண்டியது முக்கியமாகும். தாம் தீர்மானித்த நோக்கத்திற்கும் கால கட்டத்திற்குமேற்ப செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றனவா? எனத் தொடர்ச்சியாக அவதானித்தலும் வழிப்படுத்தலும் இடம்பெறுதல் வேண்டும். திட்டமிட்டவாறு திட்டமிட்ட செயற்பாடுகள் குறித்த கால கட்டத்தினுள் நடைபெறுகின்றனவா? அங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடர்பாடுகள் யாவை என மீளாய்வுக்கு உட்படுத்தலும் அவசியமாகும். இவ்வாறு தொடர்ச்சியான சுற்றோட்டச் செயற்பாடாக பிள்ளைநேய அணுகுமுறையைச் செயற்படுத்த எதிர்பார்க்கும் கனவுப் பாடசாலையை அண்மிக்க முடியும் எனலாம்.

# எதிர்பார்க்கப்படும் பிரஜை

1. பல் கலாசார சமூகத்தில் வாழ்வார். பல்வகைமைக்கு மதிப்பளிப்பார். வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து போட்டியிடமாட்டார். ஏனைய கலாச்சாரங்களை சகித்துக் கொள்வார். ஏனையோரை மதிப்பார். ஏனையோரை மனிதராக நடத்துவார். இனவாதியல்லர். புறவயமாக கலாச்சாரங்களுக் கிடையிலான இணக்கமின்மைக்குரிய காரணங்களை பகுப்பாய்வு செய்வார்.

2. தீர்மானமெடுப்பதிலே சனநாயக வழியைக் கையாள்வார். முரண்பாடின்றிக் குழுவொன்றிலே பணியாற்றுவார். மற்றையவரின் கருத்துக்களை விளங்கிக் கொள்ள முயற்சிப்பார். வளங்களைப் பகிர்வார். திறந்த மனத்துடன் இருப்பார். நுணுகிச் சிந்திப்பார். உறுதியாக செயற்படுவார்.

3. ஏனையோரின் உரிமைகளை உறுதிப்படுத்தி மதிப்பளிப்பார்.

4. ஏனையோரின் மொழியில் நன்றாகத் தொடர்படுவார். சுறுசுறுப்பாகச் செவிமடுப்பார்.

5. பிரச்சனைகளை தீர்ப்பார். சவால்களை எதிர்நோக்குவார். சிறப்பாகப் பல கலாச்சாரச் சமூகத்தில்

நிலவும் சவால்களை எதிர்நோக்குவார்.

6. முரண்பாட்டை மாற்றுவார். நேர்முறையாக சிந்திப்பார்.

7. உட்சமாதானத்தைக் கண்டவர், சமாதானமானதும் நிலைபேறுடையதுமான வாழ்க்கை முறையை உடையவர், தன் சொந்த ஆற்றலையும் வேலைப் பிரமானத்தையும் விளங்கக்கூடியவர்.

8. அரசியல் விளக்கம் உள்ளவர்.

9. ஊழலுக்கு இடமளிக்காதவர், இலஞ்சம் பெறாதவர், எதிர்பாப்புக்கள் இன்றி ஏனையோருக்குச் சேவைபுரிபவர்.

10. உலகலாவிய பார்வையை கொண்டவர், உலகப் பிரஜை, உலகின் முன்னேற்றத்துக்காக பாடுபட வேண்டுமென்ற உற்சாகம் உடையவர், சுற்றாடல் ரீதியாகவும் நட்புரிமையோடு வாழ்பவர்.

11. சிந்தனையிலோ செயல்களிலோ எவருக்கும் தீங்கு செய்யாதவர், ஏனையோரின் உணர்ச்சிகளை மதிப்பவர், உணர்வுப் பகிர்வுள்ளவர்.

12. இலங்கையின் பாரம்பரியங்கள், கலாச்சாரம், விழுமியங்கள் என்பவற்றைப் பாதுகாக்கக்கூடியவர்.

13. சட்டங்களுக்கு கீழ்படிபவர், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கும் அப்பாலான பண்புகளைக் கொண்டவர்.

## ஆசிரியர்கள் ஆண்டவனால் உருவாக்கப் படுகின்றார்கள்...

இறைவன் தமது படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை அது, அந்த அரிய படைப்பிற்கு அவர் படைத்த அனைத்தையும் விட அதிக நாட்களை அவர் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆம், சிறுவர்களது வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு ஆதாரமாக விளங்கும் ஒரு ஆசிரியரை உருவாக்குவது என்பது சாதாரண விடயமா? அது எவ்வளவு விசேடம் வாய்ந்தது என்பதை அவர் நன்கு அறிந்திருப்பார்.

அவரது இச்செயலை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தார் அங்கிருந்த தேவதூதன், "ஐயா இந்த படைப்பிற்கு மட்டும் ஏன் அதிககாலம் எடுத்துக் கொள்கிறீர்கள்?"

"நீ சொல்வது சரிதான். ஆனால் ஒரு ஆசிரியரை உருவாக்கும் போதே அவ்வுருவில் அடங்கிருக்க வேண்டிய பண்புகள் பற்றி நீ அறிந்திருக்கிறாயா?"

ஒரு ஆசிரியர்:-

மாணவர்களிடையே அவர் மட்டத்தில் வாழ்ந்துகொண்டே அவர்களைவிட மேலான விதத்தில் தீர்மாங்களை எடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

தாம் கற்பிக்கும் பாடத்தையும் விட மேலதிகமாகப் பல்வேறு விடயங்களை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

பசி, தாகம் பற்றிக் கருதாமல் செயற்படுபவராக இருக்க வேண்டும்.

எல்லா மாணவர்களிடமும் சமமாகவும் அறிவுபூர்வமாகவும் பழகக்கூடியவாக இருப்பதோடு, சரியான தொடர்பாடலை மேற்கொள்பவராக இருக்க வேண்டும்.

தன்னலம் பாராது மற்றவர் நலனைப் பற்றி நித்தமும் சிந்திக்கும் தன்மையுடையராக இருக்க வேண்டும்.

வேதனம் குறைவாக இருந்தாலும் அதனை வெளிக்காட்டாமல், தன்னை நாடிவருகின்ற மாணவர்களையும் மட்டுமல்லாது, பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கும் சில பெற்றோர்களையும் பொறுப்புடன் சமாளித்துத் திருப்திப்படுத்த வேண்டும்.

தமது நடவடிக்கைகள் அனைத்தையும் பெற்றோரும் சமூகமும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்பதை நன்கு அறிந்து, அதே வேளையில் அவர்களால் தமக்கு எவ்வித உதவிகளையும் வழங்க இயலாத சந்தப்பங்களிலும் கூட தமது கடமையைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் நிலையில் இருக்க வேண்டும்.

அது மட்டுமா? அவர் ஆறு சோடிக் கைகளை உடையவராகவும் இருக்க வேண்டும்.

"என்ன! ஆறு சோடிக் கைகளா? அது எப்படி ஐயா?" தேவதூதன் ஆச்சரியத்துடன் வினாவினார்.

புன்சிரிப்புடன் தொடர்ந்தார் இறைவன். "ஆறு சோடிக் கைகள் செய்யும் வேலையை அல்லவா இவர் செய்ய வேண்டியுள்ளது. அது கூட பரவாயில்லை. அதைவிட விசேடம் என்னவென்றால் இவர் மூன்று சோடிக் கண்கள் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அவற்றைப் பொருத்துவது தான் மகத்தான காரியம்" தேவதூதன் வியப்பின் எல்லைக்கே சென்று விட்டார். "மூன்று சோடிக் கண்களா? என்ன சொல்லுகிறீர்கள் ஐயா. இப்படியும் ஒரு படைப்பா? என்னால் நம்பவே முடியவில்லையே.

விளக்கமளித்தார் இறைவன்.

"மாணவர்களை மற்றவர்கள் சாதாரணமாகப் பார்ப்பது போல் அல்லாது, அவர்களது உண்மையான நிலையை ஆழ்ந்து நோக்குகின்ற ஒரு சோடி விழிகள்.கண்களுக்குப் புலப்படாது ஆனால் அவர்கள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களைத் தெரிவாக நோக்கியறிவதற்கான ஒரு சோடி விழிகள் ஆனால் இவை ஆசிரியரின் தலைப்பகுதியில் மறைவாக அமைந்திருக்கும்." முகத்தில் உள்ள ஒரு சோடி விழிகள், மாணவரை நேருக்கு நேர் நோக்குவது மட்டுமல்ல, அவர்களை நன்கு புரிந்து கொண்டுள்ளேன், அவர்களில் எமக்கு

எப்போதும் நம்பிக்கை உள்ளது என்பதை வெளிக்காட்டும் விதமாக அமைந்திருக்கும்" தேவதூதனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"ஐயா, இது ஓரு உன்னதமான படைப்பு. நீங்கள் இன்னும் இதற்காகப் பல நாட்கள் உழைக்க வேண்டியிருக்குமே."

இப்போது அரிய உண்மையை வெளிப்படுத்தினார் இறைவன். "என்னால் உருவாக்கப்பட்ட இப்படைப்பு பெரும்பாலும் எனக்குச் சமமாக, எமது குணங்களைக்கொண்டு அமைந்துள்ளது." :அப்படியா ஐயா?" தூதரின் வினாவுக்கு விடை பகன்றார் இறைவன்.

உடல் நலம் குன்றியிருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் பாடசாலைக்குச் சென்று கடமையாற்றுதல்.

வகுப்பில் கல்வியில் நாட்டமில்லாத பிள்ளைகள் இருந்தாலும் அனைவருக்கும் கற்பித்தல்,

தமது சொந்தப்பிள்ளைகள் அல்லாதபோதிலும் அவர்களை தனது சொந்த பிள்ளைகள் போன்று கரிசனை காட்டுதல்,

அவர்களது இடையூறுகள், பிரச்சினைகள் எவையென்பதை இனங்கண்டு ஏற்ற பரிகாரம் செய்தல்,

மாணவர்களை மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபடச் செய்தல்.

இப்படியான நற்பண்புகள் போற்றத்தக்கவை அல்லவா?

இறைவன் விளக்கமளித்த பின்னர், தேவதூதன் சந்தேகத்துடன்

வினாவினார்.
அப்படியானால் மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவராக இருப்பார். அப்படித்தானா?

"ஆம். ஆனால் மென்மையாகவும் அதே சமயம் உறுதியான அதே சமயம் உறுதியான தன்மையும் கொண்டவர். அவரது ஆளுமை செயன்முறைகள் பற்றி உன்னால் நினைத்து பார்க்கக்கூட முடியாது. அந்தளவுக்கு புதுமையானது."

அவரால் சுயமாக சிந்திக்க முடியுமா?
சுயமாகச் சிந்திக்க மட்டுமல்ல, ஆலோசனைகளை முன்வைக்கவும் பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்துவைக்க முடியும்.

இறைவன் கூறிய விடயங்களையும் கேட்ட பின்னர், தேவதூதனுக்கு அப்படைப்பைத் தொட்டுப்பார்க்க வேண்டும் எனத் தோன்றியது. மெதுவாக அவ்வுருவத்தில் கையை வைத்தபோது அதன் கன்னங்களில் ஈரமாக இருப்பது போல் தோன்றியது.

தேவதூதன் உடனே, "நீங்கள் அளவுக்கு அதிகமாகக் கவனம் எடுத்து உருவாக்கிய இப்படைப்பில் இன்னும் ஈரத்தன்மை இருக்கிறதா. அதை நீங்கள் கவனிக்கவில்லையா?"

அதைக் கேட்ட இறைவன் மனதில் சற்று கலக்கம்

அடைந்தவராகத் தான் உருவாக்கிய படைப்பின் அருகே மெதுவாகச் சென்று அதிலிருந்து ஈரத்தன்மையைக் கைகளால் துடைத்து நீக்கினார்.

"இது ஈரமல்ல தேவதூதனே, கண்ணீர்த் துளிகள்"
என்ன! கண்ணீர்த் துளிகளா? ஏன்? எதற்காக?

சொல்லுகிறேன் கேள்.

தான் செய்கின்ற சிறிய விடயங்களில் கூட சந்தேஷமடைகின்ற பிள்ளைகளைப் பார்க்கும் போது ஆனந்தமும், பெருமிதமும் ஏற்படும் போது,

வகுப்பிலே மாணவர் அனுபவிக்கும் தனிப்பட்ட துன்பங்கள், துயரங்கள், பெற்றோரின் அக்கறையின்மை பற்றி அறிய நேரும் போது,

தன்னால் உதவி செய்ய முடியாது சூழ்நிலை ஏற்பட்டு, மாணவர்களுக்குக் குறித்த அளவுக்கு மேல் வேறு எதுவும் செய்ய முடியவில்லையே என்று வேதனைப்படும்போது,

வருடம் முழுவதும் தனது பிள்ளைகள் போல் இருந்த மாணவர்கள் சித்தியடைந்து அடுத்த வகுப்புக்குச் செல்லுகின்ற சந்தர்ப்பத்தில் அப்பிரிவைத் தாங்க முடியாதபோது,

தான் முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப்போய், கல்வியை உதாசீனம் செய்கின்ற மாணவரைப் பார்க்கும்போது,

பெற்றோர் தன்னிடம் ஒப்படைக்கும் புதிய மாணவர்களை தன்னம்பிக்கையுடன் வரவேற்று அவர்களைப் பொறுப்பேற்கும் வேளையில்,

அவர்கள் கண்களில் கண்ணீர்த்துளிகள் வழியுமல்லவா ......... அது தான் இது

தேவதூதன் மனதாரப் பாராட்டினார்.

"இந்த கண்ணீர்த்துளிகள் பற்றிக் கூறியது தான் அப்படைப்பின் பெருமதியை மேலும் பன்மடங்காக உலகிக்கு உயர்த்திக்காட்டுகின்றது. உங்கள் படைப்பிலே அதி உன்னதமானது இது தான்"

அதைச் செவிமடுத்த இறைவன் முகத்தில் சற்று சோகம் படரலானது. மெதுவாக மனதிற்குள் சொல்லிக்கொண்டார்.

"இந்தக் கண்ணீர்த் துளிகளை உருவாக்கியது உண்மையில்நான் அல்ல"

# பாடசாலை வழிகாட்டல் ஆலோனைச் சேவையில் ஆசிரியர் விபகாரம்.

திருமதி. சுகந்தினி அனிரனி தவச் செல்வம்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியர் கல்லூரி

புராதன காலப்பாடசாலைகளில் ஆசிரியர்களின் பொறுப்பு மாணவர்களுக்கு கற்பித்து பாடப்பொருள் அறிவைப் பெருக்குவதுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இன்று ஆசிரியரின் விவகாரம் விரிவடைந்துள்ளது பாடசாலை செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டங்கள் வாயிலாக அனைத்து மாணவர்களும் உளவியல், உடலியல், சமூகரீதியான, உணர்ச்சிரீத்யான நலனுக்கு ஆதரவு வழங்குதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று சமூகத்தில் ஏற்பட்ட சிக்கல்களால் கற்றல் பிரச்சினைகளில், மனவெழுச்சி நடத்தைசார் பிரச்சனைகள் பாடசாலை மாணவர்களிடம் ஏற்படத்தொடங்கியுள்ளன. இந்நிலையில் அனைத்துக் கல்வி இலக்குகலின் இருப்பிடமாக விளங்குகின்றன. பாடசாலை அறிவாற்றல் விருத்தியுடன் மனவெழுச்சி வளர்ச்சியிலும் கவனம் செலுத்துவது கடமையாகின்றது. வளமான மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர் வகிபாகம் முதன்மை வகிக்கின்றது. மாணவர்களுக்கு தேவைப்படும் வழிகாட்டலும் () ஆலோசனையும் () இன்றைய கல்வியமைப்பில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. இந்நிலையில் ஆலோசனைச் செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதன் விளைவாக ஆசிரியத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்ந்து மேம்பாடடைய வழி பிறந்துள்ளது.

## ஆசிரியர்கள் கடமைகள்

மாணவர்களது ஆளுமை, முழு வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்களை அமைத்துத் தருவதே பாடசாலைக்கல்வியின் இறுதி நோக்கமாகும் என்பது இப்போது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே மாணவர்கள் தங்கள் நிலமைக்கு ஏற்ப பாடல்கலையும் பிற்கால வாழ்க்கைக்குப் பொருத்தமான தொழிலை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றில் உதவியளித்து அவர்களுக்கு வெற்றியும் மனநிறைவையும் அடையச் செய்வது இன்றைய கல்வியமைச்சின் ஓர் அங்கமாக அமைந்துள்ளது. மாணவர்கள் ஒவ்வொருவர் மீதும் தனித்தனிக் கவனம் செலுத்துதல், கற்பதற்கான கவின்நிலையை உருவாக்கல். அவர்களின் அடைவுகள், முன்னேற்றங்களை நெறிப்படுத்தல் பெற்றோருடன் நேர்நிலையான தொடர்பாடலை மேற்கொள்ளல். என்பன ஆசிரியரின் சிறப்பார்ந்த கடமைகளாக உள்ளன இந்நிலையில் ஆசிரியர் செவிமடுத்தல் திறன், ஆற்றுப்படுத்தல் திறன், உற்றுநோக்குதல் பகுத்தாராயும் திறன், தொடர்பாடத்திறன், வினாக்கேட்டல் தகவல் வழங்கும் திறன் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

## ஆசிரியரின் குணப்பண்புகள்

ஆலோசகராகவும், வழிகாட்டுபவராகவும் செயற்படும் ஆசிரியர் பின்வரும் குணப் பண்புகளை தன்னிடம் வளர்த்துக் கொள்ளல் அவசியமானது. ஒத்துணர்வு () பிறர்நலன்விரும்பி, மாணவர் நலனிலும் முன்னேற்றத்திலும் உதவி செய்யும் எண்ணம் (நேர்மானம்) நிபந்தனையின்மை, திடநிலை, நகைச்சுவையுணர்வு, துன்பகரமான பரிமானங்களை அனுபவிக்கத்தக்கவராக இருத்தல், தன்னுணர்வு (சுயவிழிப்புணர்வு) ஆகிய பண்புகளைக் கொண்டிருந்ததுடன் பொறுமை, நேர்மை, சினேக மனப்பான்மை சகிப்புத்தன்மை மகிழ்ச்சிகரமான அறிவுத்தகுதி உடைவராக விளங்குதல் வேண்டும். மேலும் ஆலோசருக்கான ஒழுக்கக் கோவை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும். உதவி நாடிவரும் மாணவர்களிற்கு உதவி வழங்கும் போது உதவி நாடுபவரதும் ஆலோசகரதும் கொளரவம் பாதுகாக்கும் வகையில் செயற்படல் அவசியமாகும். ஆலோசனை வழங்குவோரின் தேசிய நிறுவனம் மூலம் ஒழுக்கக்கோவை அங்கிகரிக்கப்பட்டுள்ளது. அதனைக் கடைப்பிடித்தல் பிரதானமாகும்.

## ஆசிரியர் தவிர்க்க வேண்டிய பண்புகள்

ஆலோசகராகப் பணியாற்றும் ஆசிரியர் பின்வரும் பண்புகளை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளல் மிக இன்றியமையாதது. தவறான வாக்குறுதியளித்தல் நன் கொடைகள் பெறல் ஆதிக்கம் செலுத்தல், எச்சரித்தல்,

மிரட்டுதல், தீர்வுகளைத் திணித்தல், வாக்குவாதம் புரிதல், வற்புறுத்தல் அறநெறி போதித்தல் குறைகூறும் பரிகாசம் செய்தல், இரக்கத்தை வெளிப்படுத்தல், அவசர முடிவு எடுத்தல் தவறான முடிவு எடுத்தல் என்பனவாகும்.

## பாடசாலை வழிகாட்டல் கட்டடங்கள்

பாடசாலை வழிகாட்டலில் ஈடுபடும் ஆசிரியர் பின்வரும் நான்கு கட்டங்களில் வழிகாட்டல்களை மேற்கொள்வது சிறப்பானதாகும்.

- ➢ கல்வி, தொழில்சார் தெரிவுகளை மாணவர் அனைவரும் பெறக்கூடிய வகையில் பாடங்கள் மற்றும் கலைத்திட்டம் ஊடாக பரந்துபட்ட அனுபவங்களை வழங்குதல்.
- ➢ மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய கல்வி மற்றும் தொழில் தெரிவுகளை மேற்கொள்ள உதவி அளித்தல்.
- ➢ வழிகாட்டலில் சிறப்பக் கல்வி பெற்ற ஆசிரியர்களின் துணையுடன் வழிகாட்டல் சேவை வழங்குதல்.
- ➢ பாடசாலை வெளியே உள்ள தொழில், கல்வி வழிகாட்டல்.

மாணவர்களது ஆற்றல்கள் அனைத்தையும் மேம்படுத்ததக்க வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை பயன்படுத்தி தனி, சமூக ஆற்றல்களை வளர்க்க உதவுதல் வேண்டும்.

பாடசாலை ஆலோசனைக் கட்டங்கள்

ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் ஆலோசனைச் செயற்பாடுகள் 4 கட்டங்களில் மேற்கொள்ளலாம்.

- ➢ மாணவர்கள் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ➢ நாளாந்தம் மாணவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சீர்மியத்திறன்களை பயன்படுத்துதல் குழுச்செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்.
- ➢ பயிற்சி பெற்ற தகுந்த ஆலோசகரால் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆலோசனை வழங்கள்.
- ➢ பாடசாலைக்கு வெளியே உள்ள நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் சேவையை பெறல்.

ஆசிரிய வகிபாகம் ஆலோசனைச் செயற்பாட்டுடன் தொடர்புடையது. ஆசிரிய வாண்மை மேம்பாட்டுக்கு கலைத்திட்டங்களில் வழிகாட்டலிலும் ஆலோசனையும் உள்ளடங்கப்பட்டுள்ளது. முதலிரு கட்டங்களையும் கையாள்வதற்கு வழங்கப்படும் பயிற்சிகள் போதுமானது. 3ம், 4ம் கட்டங்களைக் கையாள ஆலோசனைப் பயிற்சி அவசியமானது.

பாடசாலை ஆலோசனைச் சேவையாக ஈடுபடும் ஆசிரியர் மாணவர்களுக்கான உதவிச் சேவைகளை வெளிக்கள மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வது பிரதான

பொறுப்பாகும். உதாரணமாக கல்வி அதிகாரிகள், மதநிறுவனம், போதகர்கள், பாடச் சிறப்பறிஞர்கள், பாடசாலை அயலவர், பிரதேச பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், சமூகசேவையாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், போன்றவற்றிலிருந்து உதவினைப் பெற்று வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தக்கூடிய ஆளுமை கொண்டவராக இருத்தல் வேண்டும். மாணவர்களை பூரண ஆளுமை கொண்டவர்களாக உருவாக்கும் வகையில் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவை ஆரம்ப, இடைநிலைப் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவை என இரண்டு பிரிவுகளாக பிரித்து வழிகாட்டல்களை மேற்கொண்டு வருகின்றது.

ஆரம்ப பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகள்.

ஆரம்ப பாடசாலை மாணவர்கள் தம்மைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாக காணப்படமாட்டார்கள். ஆனால் ஆசிரியர் பிள்ளை பற்றி விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். மாணவர்களின் பூரண ஆளுமை விருத்திக்கான உடல், உள சுகாதார வளர்ச்சி இதில் அடங்கப்படல் வேண்டும். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டல் செயற்பாடுகளாக பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்.

➢ வாசிப்பு எழுத்து கணிதம் தொடர்பான அடிப்படைத்திறன்களை வளர்த்தல்

➢ விளையாட்டிற்கான அடிப்படை உடலியக்கத் திறன்களை வளர்த்தல்

➢ சுகாதார ஒழுக்கப் பண்புகளை விருத்தி செய்தல்.

➢ பாடசாலையுடன் சௌகரியமான முறையில் இசைவாக்கம் அடைவதற்கான வழிகாட்டல்.

➢ நாளாந்த வாழ்வுக்கு தேவையான எண்ணக்கருக்களை வளர்த்துக் கொள்ளல்

➢ சிறந்த ஆளிடைத் தொடர்புகளை ஏற்படுத்தல்

➢ மனவெழுச்சிக் கட்டுப்பாடுகளுக்கு உதவுதல்.

➢ மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

➢ சமூக இயைபாக்கம் பெற உதவுதல்.

➢ நற்பழக்க வழங்கங்களை பழக்கிக்கொள்ள உற்சாக மூட்டுதல்.

➢ உடலின் குறைபாடுகளை களைய தேவையான சிகிச்சை பெற வழிகாட்டல்.

➢ போசனை தொடர்பாக பெற்றோருக்கு வழிகாட்டல் போசாக்கு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

மேற்படி செயற்பாடுகள் வாயிலாக சிறுவர்களின் அத்தியாவசிய தேவைகளான உளவியல் அறிவு விருத்தித் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதால் பன்முக ஆளுமை கொண்ட மாணவ சமுதாயம் உருவாக்கப்படும். எதிர்கால செயற்பாடுகள் சிக்கலின்றி நிறைவேற்றிக் கொள்ள உதவுவதுடன் பிள்ளை விருத்தியில் தடைகள் ஏற்படுமிடத்து அவற்றை தவிர்த்து

ஆளுமை விருத்தியடைய உதவுவது வழிகாட்டல் ஆலோசனையாக ஈடுபடும் ஆசிரியரின் பிரதான பொறுப்பாகும்.

இடைநிலைப் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகள்.

இடைநிலைப்பிரிவு மாணவர்கள் தமது பிரச்சனை தொடர்பான புலக்காட்சி கொண்டவர்களாகவும் ஆலோசகரைத் தாமே அணுகக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆலோசனை தொடர்பான விபரங்களை அளிப்பது ஆலோசகரின் பொறுப்பு ஆகும். அன்றாடப் பிரச்சனைகளை சாதகமாக எதிர்கொள்ளவும் மனவெழுச்சிப் பிரச்சனைகள், துன்பங்கள், ஏக்கங்களைக் குறைக்கவும் ஆளுமை விருத்திக்கும் எதிர்கால வாழ்க்கைக்குரிய செயலை சிந்திக்கவும் உதவி புரிதலை நோக்கமாகக் கொண்டு செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப் பட்டிருத்தல் வேண்டும். இடைநிலை மாணவர்களுக்கு பொருத்தமான செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- நாளாந்த அழுத்தங்களுக்கு ஈடுகொடுத்து செயலாற்றும் ஆற்றலை வளர்க்க உதவும் வழிகாட்டல் செயற்பாடுகள்
- கட்டிளமைப் பருவ உளவியல் தேவைகள், உடல் வளர்ச்சிசார் பிரச்சனைகளுக்கான வழிகாட்டல்.
- மனவெழுச்சிகளை கையாளும்திறன், உடன்பாடான மனப்பாங்கை விருத்தி செய்யும் செயற்பாடுகளை

ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தல்.

- யதார்த்த பூர்வமான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவும் முரண்பாடுகளைக் களையவும் துணைபுரிதல்.
- கற்றல் தொடர்பான பிரச்சனைகள் தெரிவுசெய்த கற்கைநெறிகளுக்கு திசைமுகப்படுத்தல் பாடத்தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.
- இணைப்பாட விதான செயற்பாடுகளில் விருப்புடன் ஈடுபட வழிகாட்டல்.
- சமூக அங்கீகரிப்பிற்குரிய நடத்தைகள் ஆண், பெண் சமூக வகிபாகங்களை அறிந்து கொள்ளக்கூடிய செயற்பாடுகளுக்கு வழிகாட்டல.
- எதிர்கால குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டல்.
- வெற்றிகரமாக பரீட்சையை எதிர்கொள்ள வழிப்படுத்தல்.
- போதைப்பொருள், பாலியல் தொடர்பான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான செயற்பாடு களை நடைமுறைப்படுத்தல்.

மாணவர் சார்பாக மேற்படி விடயங்களிற்கு வழிகாட்டும் பாடசாலை ஆலோசகர் எல்லா மாணவர்களுடனும் நல்ல தொடர்புளை ஏற்படுத்திக் கொள்வது பயனுடையது. மாணவர்கள் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளவும் தானே முடிவுகளை எடுக்கவும் தனது வேலைகளை தானே ஒழுங்குபடுத்திச் செயற்படவும் பொருத்தமான வழிகாட்டல்கள் வழங்கப்படுவது இன்றியமையாததாகும்.

உசாத்துணை நூல்கள்

1. Asha Bhatnagai Nirmala Gupta (2000) Guidance and Counselling. National Council of Educational Research & Training New Delhi

2. Colin Feltham (200) what is Counselling Sega piblications London

## விசேட தேவையுடைய மாணவர்கள்
## எமது நாட்டின் சொத்துக்கள்

திரு.த.சிவகுமார்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியர் கல்லூரி

இன்றைய நவீன யுகத்திலே விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள், தொழிநுட்ப சாதனங்களின் வளர்ச்சி அதிகமாக காணப்பட்ட போதிலும் விசேட தேவையுடையவர்களின் தோற்றமும் எண்ணிக்கையும். அதிகமாகவே உள்ளன. இதற்கு பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. முக்கியமாக பிறப்பிற்கு முன்னர், பிறப்பின் போது, பிறப்பின் பின்னர் என விசேட தேவையுடைய பிள்ளைகள் உருவாகின்றனர். இவர்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அனைவருக்கும் வேண்டும். அவர்களிடம் மாற்று ஆற்றல் காணப்படும். ஏதோ ஒரு புலன் குறைபாடு காணப்பட்டாலும், ஏனைய புலன்கள் மிகச்சிறப்பாக இயங்கும். அவ்வாறான பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்ற கல்வி விசேட கல்வி ஆகும்.

விசேட கல்வி என்பது உடலியல்புகள், நுண்மதி, சமூக நடத்தை, மனவெழுச்சி நடத்தை என்பவற்றில் சாதாரணமானவர்களில் இருந்து வேறுபடும் மாணவர்கள் மீதும் உடல், உள, அங்கக் குறைபாடுடைய மாணவர்களுக்கும் விசேட நிபுணத்துவம் உடைய பிள்ளைகளுக்கும் மெல்லக்

கற்கும் மாணவர்களுக்கும் அவர்களின் விசேட தேவைகளை இனங்கண்டு கற்றல் கற்பித்தலில் ஈடுபடுத்துவதே விசேட கல்வியாகும்.

விசேட தேவையுடைய மாணவர்களின் இயல்புகள், நடத்தைகள், வெளித்தோற்றம் என்பவற்றின் அடிப்படையிலேயே பின்வருமாறு அவர்களை வகைப்படுத்த முடியும்.

1. மீத்திறனும் விசேட நிபுணத்துவமும்
2. அறிவு சார் குறைபாடு
3. ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனங்கள்
4. நடத்தை ஒழுங்கீனங்கள்
5. உடல் மற்றும் ஆரோக்கியக் குறைபாடு
6. பேச்சு மற்றும் மொழிக் குறைபாடு
7. கற்றல் குறைபாடுகள்
8. மனவெழுச்சி நடத்தை பிறழ்வுகள்
9. புலன்சார் குறைபாடு
10. நற்சிந்தனை
11. மெதுவாக உளவளர்ச்சி அடைதல்
12. பல்வித இயலாமைகள்
13. வேறு சுகாதாரக் குறைபாடு
14. மூளையில் ஏற்படும் பிறழ்வுகள்
15. உடல் அவயவக் குறைபாடு
16. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு
17. தொடர்பாடல் குறைபாடு

18. மனநிலை பாதிக்கப்பட்டோர்
19. சமூகவிரோத நடத்தைகள்
20. ஆக்கத் திறனுடைய பிள்ளைகள்
21. உளக் குறைபாடுடைய பிள்ளைகள்
22. பொருத்தமற்ற நடத்தைப் பிரச்சனைகள்
23. அரங்கக் குறைபாடுகள்
24. கவனமிளப்பும் பிறழ்வும்

இவ்வாறான பல்வேறு வகைப்பட்ட பிள்ளைகளைக் கையாளக் கூடிய அறிவும், ஆற்றலும், திறனும், பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அவசியமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஏற்பாடுகள் கற்றல் கற்பித்தல் முறைகள், சாதனங்கள் என்பன அவர்களின் இயலாமையின் அளவை குறைத்து அவர்கள் இலகுவாக சாதாரண வகுப்பறைகளில் கற்பதற்கான ஏற்பாடுகள் அதிகமாகி உள்ளது.

ஆனால் வளர்முக நாடுகளில் இத்தகைய வசதிகள் கிடைக்கப் பெறாமையினால் வலது குறைவான பிள்ளைகள் அதிகமானோர் காணப்படுகின்றனர்.

குறைபாடு என்பது அனைவரிடமும் ஏதோ ஒரு விதத்தில் காணப்படுகின்றது. அந்தக் குறைபாடுகள் மூலம் ஏற்படும் இயலாமையினை அதற்கான கருவிகள் மூலம் அல்லது

கிசிச்சை மூலம் நிவர்த்தி செய்யுமிடத்து குறைபாடுகள் வலது குறைவாக அமையாது.

சாதாரணமாக பார்வைக் குறைபாடுடைய ஒருவர் தூரப் பார்வை, கிட்டப்பார்வை குறைபாட்டிற்கேற்ப கண்ணாடிகளை அணிந்து கொள்ளலாம். பூரண பார்வைக் குறைபாடுடைய ஒருவர் வெள்ளைப் பிரம்பு, அபக்கஸ், பிறையில் என்பவற்றை பயன்படுத்த முடியும். ஆனால் பல பிள்ளைகளது குறைபாடுகள் காரணமாக இயலாமைகள் கவனிக்கப்படாது வலது குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

உதாரணமாக பூரண கேட்டல் குறைபாடுடைய ஒருவர் கொக்கிலியர் இம்பிளான்ட் கிசிச்சை மூலம் கேட்டல் சக்தியை பெற முடியும். ஆனால் இதனை அறியாமல் வலது குறைவுடன் எத்தனையோ பிள்ளைகள் உள்ளனர்.

விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பாக வெறுப்புக் காட்டாமல் தாங்கள் எதிர்பார்த்த பிள்ளைகள் கிடைக்கவில்லையே இவர்கள் எமக்கு சுமையாக உள்ளனர். இவர்களிடம் என்ன இருக்கிறது. என உதாசீனப்படுத்தாமல் அவர்களின் இயலுமைகளை இனங்கண்டு அவர்களிடம் உள்ள மாற்று ஆற்றல்களை வெளிக்கொண்டு வர சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அப்போது அவர்கள் ஒரு வளமாக காணப்படுவார்கள். இதனால் நீங்கள் பெருமையடைவீர்கள். விசேட தேவையுடைய

பிள்ளைகளை பெற்ற பெற்றோர்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒருவர் நிக் ஆவார். இவருடைய வரலாறு உங்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை தரும் நிக்கின் பெற்றோர்கள் அவுஸ்திரேலியாவை சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லாத் தாய் தந்தையரைப் போலவே கருவிலே குழந்தையை சுமந்து அன்புடனும் பல எதிர்பார்ப்புக்களுடனும் வாழ்ந்து வந்தனர். பிள்ளைகள் பூமியைத் தொடும் காலம் வந்தது. தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது என தாதியர் அவரை எடுத்து வந்து தந்தையிடம் கொடுத்தனர். தந்தையோ அவரை வேண்டாமல் ஓடிச் சென்று வாந்தி எடுத்தார். எனக்கு இந்த பிள்ளை வேண்டாம் என கதறி அழுதார். பின்னர் தாயிடம் கொண்டு போன போது அவர் இது எனது பிள்ளை இல்லை எனக்கு வேண்டாம் என வெறுத்து ஒதுக்கினார் காரணம் பிள்ளைக்கு இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இல்லை. இருப்புப் பகுதியில் கால்களுக்குப் பதிலாக இரண்டு விரல்கள் மட்டுமே உள்ளது.

பின்னர் அவர்களது பெற்றோர்கள் தமது மனதை திடப்படுத்திக் கொண்டு அவரை வளர்க்க ஆரம்பித்தனர். அவர் உலகில் பிரசித்தி பெற்ற ஒருவராகி வரவேண்டும் என்ற வேட்கையுடன் வளர்க்க முற்பட்டனர். இன்று அமெரிக்காவிலே வாழ்ந்து வரும் நிக் தான் வளர்கின்ற இடத்திலே பல தற்கொலை முயற்சிகளில் இறங்கியதாகவும் தன்னால் தற்கொலை கூட தனித்து செய்யமுடியாமல் இருந்தது என்றும்

இவ்வாறு இயலாமையுடன் இருந்த எனக்கு தன்னம்பிக்கை ஊட்டிய ஆசிரியரின் செயற்பாட்டினில் உலக மக்களை கவர்ந்த ஒருவராக இருக்கின்றார்.

இரண்டு கால்கள், கைகள் உள்ள எமக்கு நீச்சல் தெரியாத காலத்திலே இவரால் தனது அனைத்து கடமைகளையும் செய்து கொள்ள முடிவதோடு குறிப்பாக இவரது பொழுதுபோக்கு நீச்சலாகும். அத்தோடு உதைபந்தாட்டம், பாய்மரக்கப்பலை செலுத்துவது பல்கலைக்கழகங்களில் தன்னம்பின்னை ஊட்டும் சொற்பொழிவுகளை ஆற்றுபவராக காணப்படுகின்ர். இவர் அண்மையில் திருமண பந்தத்திலே இணைந்து கொண்டார் இவரது வரலாறு எமக்கெல்லாம் வழிகாட்டி.

இவ்வாறாக உலகளாவிய ரீதியில் ஊனமுற்றவர்கள் ஒன்று சேர்ந்து பராஒலிம்பிக் போட்டியில் பலசாதனைகளை படைத்துள்ளனர். அதேபோன்று மனவெழுச்சி குன்றியவர்களுக்காக சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் நடாத்தப்பட்டு அவர்களது திறன்கள் நிரூபிக்கப்படுகின்றன.

இவ்வாறான விசேட தேவையுடைய பிள்ளைகளை அனுதாபமாக பார்க்காமல் அவர்கள் மாற்று ஆற்றல் உள்ளோர். அவர்களிடம் நிறைய திறன்கள் உள்ளது. என மனதிலே கொண்டு பெற்றோர், ஆசிரியர்கள், கல்வியலாளர்கள் செயற்படும் போது ஆரோக்கியமான வாழ்வு அவர்களுக்கு

# Be Positive

Be positive
Think Positive ..... think positive ...........think positive..........
positive ....... positive............. positively
positive ............ positive........... positively
Be positive...... do positive...............2
make good + happy thoughts in our minds...................2
Learn together we change together...................2
make good + happy thoughts in our minds.................2
Make good...... make good............. make
good..............make good......
Be positive............think positive.................

I respect others always
I listen what other people say
I visualize only a favorable one
I image only a positive situation
my positive thought is mighty power...........1
Be positive............think positive..................................

I dedicate for good citizen
I replace negative thoughts with positive thoughts
I never give a place to enter evil thoughts
I will fill my mind with confidence and joys
I will fill my heart with light and hope................1
Be positive ...................... Think positive..................................

# Be Positive

Think Positive .... think positive ............think positive.........
positive ......positive............ positively
positive ............ positive........... positively
Be positive ..... do positive..............2
make good + happy thoughts in our minds..................2
Learn together we change together.................2
make good + happy thoughts in our minds....................2
Make good...... make good................make
good...............make good......
Be positive..............think positive..............

I respect others always
I forget what other people say
I visualize only a favorable one
I image only a positive situation
my positive thought is mighty power...........1
Be positive...........think positive........


I dedicate for good citizen
I replace negative thoughts with positive thoughts
I never give a place to enter evil thoughts
I will fill my mind with confidence and joys
I will fill my heart with light and hope...............1
Be positive ........................ Think positive.........















Caxton Printers, Kalvijankadu